# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. VI    Issue 3    June 2016

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 8 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 9 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 11 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 13 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 15 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 17 |
| ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1 . . . . . . | 20 |
| **The Life Divine – Outline** (தமிழ்) . | 23 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 28 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 38 |
| **அன்னை இலக்கியம்** | |
| மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . | 40 |


### ஜீவியத்தின் ஓசை

சிருஷ்டி
ஆரம்பத்தில்
ஒரு
எண்ணமாகும்.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

### II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 299
Para 5

There is more to perplex us.

The original indeterminate Energy throws out general determinates of itself.
We might equally call them generic indeterminates.

These determinates have appropriate states of substance.
They have determined forms of that substance.
The latter are numerous, sometimes innumerable variations.
They are variations on the energy-substance which is their base.
But none of these seems to be predetermined.

They are not determined by anything in the nature of the general indeterminate.
An electric Energy produces positive, negative, neutral forms of itself.



### II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

இங்கு நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடிய இன்னும் அதிகமானவை உண்டு.
நிர்ணயம் செய்ய இயலாத மூல சக்தி தன்னைப் பொதுவான நிர்ணயங்களாக வெளிப்படுத்துகிறது.
நாம் அவற்றைப் பொதுவாக நிர்ணயம் செய்யப்படாதவை என்றும் அழைக்கலாம்.
இந்த நிர்ணயங்கள் அந்தந்த நிலைக்குரிய பொருளைக் கொண்டவை.
அப்பொருளின் ரூபத்தை அவை நிர்ணயம் செய்துள்ளன.
ரூபங்கள் எண்ணற்றவை, சில நேரங்களில் ஏராளமான மாறுபாடுகள் உண்டு.
இம்மாறுபாடுகள் அதன் அடிப்படையான சக்தியின் சாரமான பொருளில் உள்ளன.
ஆனால் இவை எதுவும் முன்னரே நிர்ணயிக்கப்பட்டவை அல்ல.
பொதுவாக நிர்ணயிக்கப்படாதவைகளின் தன்மையில் உள்ள எதனாலும் இவை நிர்ணயம் செய்யப்படுவதில்லை.
ஒரு மின்சக்தி தன் நேரான, எதிரான, சமமான ரூபங்களை உற்பத்தி செய்கிறது.

These forms are at once waves and particles.

A gaseous state of energy-substance produces many different gases.

A solid state of energy-substance develops into different forms of earth.

They are rocks, minerals and metals.

A life principle produces its vegetable kingdom.

It teems with a countless foison of quite different plants, trees, flowers.

A principle of animal life produces an enormous variety of genus, species.

So it proceeds into human life and mind and its mind-types.

It proceeds towards the still unwritten end.

Perhaps the end is the yet occult sequel of that unfinished evolutionary chapter.

Throughout there is the constant rule of a general sameness.

It is in the original determinate.

There is a sameness of basic substance and nature.

But there is a profuse variation in the individual determinates.

An identical law obtains of sameness in the species with numerous variations.



இந்த ரூபங்கள் ஒரே நேரத்தில் அலைகளாகவும் துகள்களாகவும் உள்ளன.

வாயு நிலையிலுள்ள ஒரு சக்திப் பொருள் அநேக வேறுபட்ட வாயுக்களை உற்பத்தி செய்கிறது.

ஒரு திட நிலையிலுள்ள சக்திப் பொருள் பூமியின் வேறுபட்ட ரூபங்களை உருவாக்குகிறது.

அவை பாறைகள், கனிமங்கள் மற்றும் உலோகங்கள்.

வாழ்வின் ஒரு விதி தாவர ராஜ்யத்தை உற்பத்தி செய்கிறது.

அது எண்ணற்ற அளவிலான முற்றிலும் மாறுபட்ட செடிகள், மரங்கள், மலர்களாகப் பெருக்கம் அடைகிறது.

விலங்கின வாழ்வின் ஒரு விதி ஏராளமான, வகையான இனப்பிரிவுகள் மற்றும் இன வகைகளை உற்பத்தி செய்கிறது.
அது தொடர்ந்து மனித வாழ்வு, மனம் மற்றும் மனத்தின் வகைகளை உருவாக்குகிறது.

அது மேலும் எழுதப்படாத முடிவை நோக்கித் தொடர்கிறது.

ஒருவேளை முடிவு என்பது இறுதியற்ற பரிணாம அத்தியாயத்தின் மறைத்தொடராக இருக்கலாம்.

பொதுவான மாறுதலற்ற இயல்பு அங்கு முதலிலிருந்து முடிவுவரை மாறாத சட்டமாக உள்ளது.

இது மூலமான நிர்ணயத்தில் உள்ளது.

அங்கு அடிப்படையான பொருள் மற்றும் குணத்தின் மாறுதலற்ற நிலை உண்டு.

ஆனால் அங்குத் தனிப்பட்ட நிர்ணயங்களில் அதிகளவு மாறுபாடுகள் உள்ளன.

ஒரேமாதிரியான சட்டம் ஒரே வகை இனப்பிரிவையும் அதில் எண்ணற்ற மாறுபாடுகளையும் பெறும்.

They are often meticulously minute in the individual.

But we do not find anything necessitating these variations resulting from the determinate.

There seems to be a law.
It is a necessity of immutable sameness at the base.
And free and unaccountable variations on the surface.

But who or what necessitates or determines?

What is the rationale of the determination?
What is its original truth or its significance?
What compels this exuberant play of varying possibilities?

They seem to have no meaning unless it be the delight of creation.
A Mind might be there, or a seeking inventive Thought.

A hidden determining Will might be there.
But in the first appearance of material Nature there is no trace of these.

Contd...

**ஜீவிய மணி**

*நாமறிந்த அனைத்துக்கும் பொறுப்பேற்பது ஜீவியத்தின் பொறுப்பு.*



அவை பெரும்பாலும் மனிதனில் மிக உன்னிப்பான நுட்பமானது.
ஆனால் நிர்ணயங்களின் செயல்பாடுகளில் எதுவும் இந்த மாறுபாடுகளை அவசியமாக்குவதாக நமக்குத் தெரியவில்லை.
அங்கு ஒரு சட்டம் இருப்பதாகத் தெரிகிறது.
அசையாத சமநிலை அடித்தளத்தில் இருப்பது அவசியமாகிறது.
சுதந்திரமான மற்றும் காரணம் கூற முடியாத வேறுபாடுகள் மேற்பரப்பில் இருப்பதும் அவசியமாகிறது.
ஆனால் இந்த அவசியத்தை அவசியமாக்குவது, நிர்ணயிப்பது யார் அல்லது எது?
அந்த நிர்ணயத்தின் கோட்பாடு என்ன?
அதன் மூல சத்தியம் அல்லது முக்கியத்துவம் என்ன?
வேறுபாடுகளின் சாத்தியங்களைக் கொண்ட உற்சாகமான இந்த லீலையை எது வற்புறுத்துகிறது?
சிருஷ்டியின் ஆனந்தம் என்பதைத் தவிர இதற்கு வேறு அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை.
அங்கு ஒரு மனம் இருக்க வேண்டும், அல்லது நாட்டத்தோடு கூடிய கற்பனா சக்தி கொண்ட ஒரு எண்ணம் இருக்க வேண்டும்.
மறைவான, நிர்ணயம் செய்யும் ஓர் உறுதி இருக்க வேண்டும்.
ஆனால் ஜடப்பிரகிருதியின் முதல் வெளிப்பாட்டில் இவற்றிற்கான அறிகுறி இல்லை.

தொடரும்...

**ஜீவிய மணி**

*ஜீவியத்தின் பொறுப்பு பொறுப்புணர்ச்சிக்கு விழிப்பு தரும்.*

**இம்மாதச் செய்தி**

# காலத்தை வெல்ல அவசரமில்லாத சுறுசுறுப்பும் ஆன்மிக நிதானமும் தேவை.



**சாவித்ரி**

**Page 185: There is knowledge in the heart of sleep**

*உறக்கத்தின் இதயத்திலும் ஞானம் உள்ளேயுறைகிறது*

✡ இயற்கை அவற்றை விழிப்பான சக்தியாக வந்தடைகிறது

✡ இலட்சியம் அவர் தலைவர், அவரரசன்

✡ சூரியனையும் ஆளும் ஆர்வம் எழுகிறது

✡ சத்தியத்தை அழைத்து பெரு ஆட்சி நடத்தக் கேட்டார்கள்

✡ அவள் அன்றாடச் செயலில் அவளை உள்ளுறை தெய்வமாகக் கொண்டார்கள்

✡ அவள் குரல் அவரெண்ணத்தை உற்சாகப்படுத்தும்

✡ அவள் மூச்சில் உருவாகும் ரூபத்தைத் தங்கள் வாழ்வாக்கினர்

✡ அவளுடைய பொன்னான சூரிய தெய்வம் புலப்படும் வரை

✡ இருளின் சத்தியத்தை அவரும் ஏற்றனர்.

✡ சொர்க்கமானாலும், நரகமானாலும், போரிட்டுப் பெறவேண்டும்

✡ சத்திய வீரர்கள், ஒளிமயமான இலட்சியத்திற்குச் சேவை செய்கின்றனர்

✡ பாவத்தின் கூலிக்கு வேலை செய்யும் தீமையின் வீரர்கள்

✡ நல்லதிற்கும் கெட்டதிற்கும் உரிமை சமம்

✡ எங்கெல்லாம் அறியாமை அறிவின் இரட்டைப்பிறப்பு

✡ வாழ்வின் சக்தியெல்லாம் தெய்வத்தை நோக்கியெழும்

✡ விரியும் பரப்பு அச்சூழலின் துணிச்சலான சந்தர்ப்பம்

✡ தன் கோயிலைத் தானெழுப்பி தம் மக்களைச் சேர்த்து

✡ பாவத்துள்ளும் இறைவன் எழுந்தருளியுள்ளான்

✡ அவள் சட்டத்தின் அழகையும், பெருமையையும் நிலை நிறுத்தி

✡ வாழ்வு அவள் இயல்பாக வாழும் லோகம்

✡ உலகத்தின் அரியாசனத்திலமர்ந்து, போப்பாண்டவரின் போர்வையை ஏற்று

✡ அவள் புனித உரிமையை அவள் பக்தர்கள் பறையறிவிக்கிறார்கள்

✡ பெருமை நிறைந்த பொய்யின் சிவந்த கிரீடம்

✡ கோணல் தெய்வத்தின் நிழலைத் துதித்து

✡ மனத்தைச் சுழற்றும் கரிய எண்ணத்தை அனுமதித்து

✡ ஆத்மாவை அழிக்கும் விபச்சாரியுடன் கலந்து

✡ பெரும் புண்ணியத்தின் சிலையான பாங்கு

✡ அசுரனின் தீவிரம் கர்வமான அவதியை உந்தி

✡ விவேகத்தின் சந்நிதியில் அரசனும், சாஸ்திரியும்

✡ சக்தியின் சிலைக்குத் தம் வாழ்வை பலியிட்டு

✡ அலையும் விண்மீனென அழகு மிளிர்கிறது

✡ எட்ட முடியாத தூரம், அவளொளியைத் தீவிரமாகத் தொடர்ந்து

✡ வாழ்விலும், கலையிலும் அழகின் கதிரைச் சந்தித்து

✡ உலகைப் பிரகாசமான பொக்கிஷமாக்கி

✡ எளிய உருவமும் அற்புத ஆடையணிந்து

**ஜீவிய மணி**

*முழு வாழ்வும் அதன் ஒரு பகுதிக்கு இசைவது வாழ்வின் எதிரொலி எனப்படும்.*



## யோக வாழ்க்கை விளக்கம்

**22/30. அழைப்பு தவிர எதுவும் தவறும் சமர்ப்பணத்தைச் சமாளிக்க முடியாது.**

**சமர்ப்பணம் தவறாது.**

- சமர்ப்பணம் செய்ய முடியாவிட்டால் என்ன செய்வது.
- அழைப்பை மேற்கொள்ள வேண்டும்.
- அழைப்பது சமர்ப்பணத்தைவிட சிரமம் என்று அந்த நேரம் தோன்றும்.
- எதுவும் வேண்டாம், அழைப்பும் வேண்டாம் எனக் கோபம் வரும்.
- மனிதன் அன்னையிடம் வருவது சிரமம், அன்னையை விட்டு விலகுவது எளிது.
- இந்த நேரம் என்ன செய்ய?
- *விலகும் எண்ணத்தை விலக்கி பொறுமையாக இருந்தால் பின்னர் அழைக்க மனம் சம்மதிக்கும். சமர்ப்பணம் தடையானது விலகும்.*
- பொறுமை அமைதியின் சமர்ப்பணம்.
- வேதம் இந்த அம்சத்தை அறிந்து அதை "இரவு" என்றனர்.
- பின்வாங்கும் இராணுவம் ஒழுங்காகப் போவது சிரமம்.
- ஏழ்மை வந்தபின், நிலையிழந்து, ஆனால் குடும்பம் சிதையாமல் உள்ளூரிலேயே இருப்பதுண்டு. அது கொடுமையான வாழ்வு.
- *அந்த நிலை சில ஆண்டுகளிருந்தால் அதைக் கடந்தவர், அந்த ஊரில் உள்ள அனைவரையும் கடப்பார்.*

- வீட்டில் ஏற்பட்ட சாவுக்கும் வராத உறவினர் மாறிய நிலையில் வீட்டு நாய் அடிபட்டதை வந்து விசாரிப்பார்கள்.
- **Timon of Athens** என்ற ஷேக்ஸ்பியர் நாடகம் அதைக் கூறும்.
- மனிதர்கள் கைவிடுவது இயல்பு என அறிபவரும் *வாழ்வு கைவிடுவதைக் கண்டு மிரள்வார்கள்.*
- போர்ஷியா ஷைலக் கேஸை ஜெயித்தவுடன் ஷைலக் மகள் ஜெஸ்ஸிகா ஒரு கிறிஸ்துவனுடன் ஓடிய செய்தி வருகிறது. இது போர்ஷியா செய்ததில்லை. வாழ்வு கொடுத்த பரிசு. அதைக் கடந்து வர இயலாது.
- அன்பன் அந்த நிலைக்கு வர மாட்டான். வந்தால் அவனுக்கு அப்பொழுது பூரணயோக வாயில் திறக்கும்.
- 100 ஏக்கர் பயிரில் பங்குபெற முயன்று தோற்ற நேரம் 1000 ஏக்கர் கட்டாயமாக வரும்.
- அன்னையை அறிந்தவரும் நம்பமுடியாத செய்தி அது.
- திருமணமே ஆகாது என்றிருந்த குடும்பத்தில் ஒரே சமயத்தில் இரண்டு திருமணம் நடக்கும். அதுவும் தகப்பனாருக்கு எந்தச் செலவுமில்லாமல் நடந்தேறும். உபநயனமும் உண்டு.
- அழைப்பை மேற்கொண்டால் பயங்கர சொப்பனம் மறைந்து அமைதியாகத் தூங்கலாம். சமர்ப்பணம் சகல நிம்மதியும் தரும்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உள்ளுறையும் ஆன்மா வெளிப்பட்டு யுகாந்த கால ஞானத்தை நொடியில் பெறுவது யோகம்.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 125. நாளை நடப்பது vision தரிசனமாகத் தெரிவது.

- **Vision** என்பது காட்சி, அகக் காட்சி.
- மனம் வளராதவர், படிக்காதவர், பெண்களுக்குரியது.
- காலை 10 மணிக்கு "மகன் வருவான்" எனத் தாய் கூறினால் அவன் வருவான்.
- **It is a vital vision.** நடக்கப்போவது தெரிவது.
- மனம் வளர்ந்தவர்க்கு இக்காட்சி மனத்தைக் கடந்து தெரியும்.
- *ஒருவர் பகவானைக் கண்ட இடத்தில்* **Auroville** *உற்பத்தியாயிற்று.*
- வளர்ந்த மனம் ஆத்மாவால் கண்டது அது. அது பூரண யோக வாயில்.
- ஒரு சர்க்கார் நிறுவனம் 1970-இல் 60 கோடி நஷ்டமடைந்தது.
- ஓர் அன்பர் அதன்மீது ஆகாயத்தில் பகவான், அன்னையைக் கண்டார்.
- பிறகு அங்கு அவருக்குப் போக நேர்ந்தது.
- நிறுவன நிலைமை மாறியது.
- உற்பத்தி, 47%-லிருந்து 93%-க்கு வந்தது.
- இந்தியாவில் முதன்மையாயிற்று.
- கடன் கரைந்தது.
- 10 அல்லது 20 ஆண்டுகளுக்குப்பின் 60 கோடி கடன் 60 கோடி இலாபமாயிற்று.
- அது **vision.** அது அவருக்குப் பூரண யோக வாயில்.
- ஒரு அன்பர் **The Life Divine** படித்தார். உணர்ச்சிவசப்பட்டார்.

- பூமிமேல் நிற்பதாகக் கண்டார்.
- அது நிஜமான உணர்ச்சி. பூமியைவிடப் பெரியவராகையில் கீழே விழுந்துவிடுவோமோ என நினைத்தார்.
- அன்பர்கள் அனைவரும் சூட்சுமத்தில் பூமியைவிடப் பெரியவர்கள்.
- கடவுள்களின் பரிணாமம் பூமி அளவு.
- அவர்கள் சத்திய ஜீவியத்தில் பிறந்தவர்.
- பூரண யோக வாயிலை, வாயிலிலேயே அன்பர்கள் காணக் கூடியவர்கள்.
- சாவித்ரி அதுபோன்று பல வாயில்களைக் கூறுகிறது.
- *வேண்டாம் என்றால், உண்டு.*
- வேண்டாம் என்பவர் கணக்கிலில்லை.
- அருள் 1000 ரூபாய் சம்பளம் கேட்பவனுக்கு 2000 ரூபாய் கொண்டு வரும்.

  சட்டம் - அவன் மனத்திற்குரிய சட்டம் - அதை 1300 ஆக்கும்.

  அவன் மனைவி பழைய 650 போதும் என்பாள்.

  இத்தனைக்கப்புறமும் எப்படி இழந்ததைப் பெற முடியும் என அந்த அன்பருக்குக் கேட்கத் தோன்றவில்லை.

  *கேட்டால் கிடைக்கும், இதைவிட அதிகமாகவும் கிடைக்கும்.*

  வாழ்க்கைப் பலனை நாடினால் வாயில் மூடிக்கொள்ளும்.

  வாழ்க்கைப் பலனைத் தேடாவிட்டால் வாயில் அதிகமாகவும் திறக்கும்.

  பலனும் பல மடங்கு பெருகும்.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உயர்ந்த தத்துவங்கள் உயர்ந்த வலிமையுடன் மறுக்கப்படும்.



## அஜெண்டா

**உன் உச்சகட்ட முயற்சியை எடு.**
**மூலத்துடன் இணைய வேண்டும்.**
**பரமனின் அருளுடன் ஐக்கியமாக வேண்டும்.**
**பூமியே முன்னேற விழையும் உறுதியும் ஒவ்வொரு மனிதனும் உய்ய வேண்டும் எனும் உறுதியும் தேவை.**

- உச்சகட்ட முயற்சிக்கு குறைந்தபட்ச பலன் தவறாது வரும்.
- முயற்சியும் பலனும் இருவகை.
  1. முடிந்ததெல்லாம் செய்தவன் நினைத்ததைக் கடந்து சாதிப்பான்.
  2. குறைந்தபட்ச முயற்சி செய்தவனுக்கு ஆரம்பிக்க முடியாது.
- தன் வேலையில் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்தவன் குறைந்தபட்ச முயற்சியென நினைத்தான். அவன் வேலை மாநிலம் முழுவதும் பரவி புகழடைந்தது.
- தொழிலுக்கு வருபவன் முதலில்லாமல் சாதுர்யமாக செயல்பட நினைப்பதுண்டு. முதலில்லாமல் மற்ற எல்லா முயற்சிகளும் பிரம்மாண்டமாகத் தோன்றும். முடிவில் ஆரம்பிக்க முடியவில்லையெனக் காண்பான்.
- திறமையில்லாத கதாசிரியர் உலகப் புகழ்பெற விரும்புவதும், சொந்தத் தொழிலில் இலாபம் காணாதவர் தொழிலில் முதன்மையாக வர விரும்புவதும் பேராசையின் சின்னங்கள். அவர் தன் குறையை அறியாதவர். பெரும் பலனை நினைப்பவர். இவருக்கு உள்ளதும் போகும். இவருக்கு எவரும் பெறாத நஷ்டம் வரும். கணக்குப்பிள்ளை இரும்புப் பெட்டியிலிருந்த எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்ற செய்தி வரும். நெடுநாளாக அராஜகம் செய்தவனை இரவு 10 மணிக்கு பழைய எதிரி சுட்டுக்கொன்றது தெரியும்.
- வாடிக்கைக்காரரிடமிருந்து ஐந்து கோடி சன்மானம் வாங்கியவர், வாடிக்கைக்காரரின் இருபது இலட்ச பாக்கிக்காக

சப்ளையை நிறுத்தினார். அவருக்குத் தலைப்புத் தெரியாது. தலைப்புப் பலவகையாக வெளிப்படும். அவற்றுள் ஒன்று, மூன்று கோடி வியாபாரம் செய்த வாடிக்கைக்காரர் நூறு கோடியை எட்டி, முதலாளியைக் கடந்து ஐநூறு கோடிக்குப் போனார். வாடிக்கைக்காரருக்குத் தலைப்புத் தெரியாது. தலைப்பின் சாரம் தெரியும்.

- மனிதன் உச்சகட்ட முயற்சியை எடுப்பவன். தனக்கு இலாபமானதைத் தவறாகப் பயன்படுத்துவதில் உச்சகட்ட முயற்சியை எடுப்பான். யார் எதைச் செய்தாலும், அவருக்குள்ள பலன் வருமே தவிர அவர் நினைப்பது நடக்காது. முப்பத்திரண்டு பஸ் வைத்திருந்த முதலாளி இறந்தார். ஒரே மகன் இளைஞன். கணக்குப்பிள்ளைக்குக் கணக்கு புரியும். பத்து பஸ் தனக்கு வேண்டுமென்று கேட்டார். பெற்றார். வெகு சீக்கிரம் தன் பழைய சொத்தையும் சேர்த்து இழந்தார். அத்துடன் பழைய முதலாளியும் எல்லா பஸ்ஸையும் - ஒன்று தவிர - இழந்தார். ஒரு தலைமுறையில் திறமை அடுத்த தலைமுறையில் திறமையின்மை. அது ஏமாற்றுபவனுக்கு ஆதாயம். தலைப்பை ஜீவனோடு பின்பற்றினால் தலைமுறை தலைமுறையாக வந்தது போகாது. வந்தது பெருகும். இதுவரை நம் நாட்டில் இது தவறானவன் திறமையில் சரியாக பல தலைமுறைகளில் செயல்பட்டது. சரியானபடி தொழில் செய்து தலைப்புப் பலித்தது அமெரிக்காவில். அவர்கள் பொய் சொல்வதில்லை. பொய்க் கணக்கை நூறு ஆண்டாக எழுதுவதில்லை. அதற்கு முன் அமெரிக்கா இந்தியா போன்றிருந்தது. வியாபாரம் **trade commerce** ஆனபின் பொய் சொல்லாதவனுக்குத் தலைப்பு ஆதாயமாகச் செயல்பட்டது. அது மட்டுமல்ல. **Commerce** வளர்ந்து அரசியல் செல்வாக்காகி நாடு சாம்ராஜ்யத்தை நிலைநாட்டியது. காலம் மாறும். சத்தியம் மாறாது. காலம் பொய்க்கும் உதவும், மெய்க்கும் உதவும். சத்தியம் காலத்தின் பொய்யை அழிக்கும். சத்தியம் ஆத்மாவானால் காலனையே அழிக்கும். £ 70,000 பவுனை ஏமாற்றியவனுக்கு ஏமாந்த பிரபு அவன் திவாலானபின் ஆண்டுதோறும் உதவித் தொகை அளித்தார்.



## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

19. தேவையான செலவுகளை மனம் சுருங்காமல் செய்து கொண்டு வந்தால் பண வரவு தொடர்ந்து வந்து கொண்டிருப்பதற்கு ஏதுவான வாய்ப்புகள் நம் வாழ்க்கையில் திறந்தேயிருக்கும்.

நமது குறிக்கோள் என்ன? பணம் சேமிப்பு வேண்டுமா? செலவுக்குப் பணம் வேண்டுமா? ஏராளமான பணம் வந்து குவிய வேண்டுமா?

**தடையின்றிப் பணவரவு வேண்டுமானால்**
**தடையின்றிச் செலவுகளைச் செய்ய வேண்டும்**

என்பது அன்னை கூறுவது. நீருற்று இறைக்க இறைக்க ஊறும். சமூகம் ஒரு பெரிய நீர் நிலை போன்றது. பணத்தைச் சிக்கன-மாகச் செலவு செய்ய வேண்டும் என்ற நம் பழக்கம் மேலும் தொடர்ந்தால் அது அதிகப் பண வரவுக்குத் தடையாகும். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில் என்பது போல் செலவு செய்தால் பணம் சந்தோஷப்பட்டு மேலும் மேலும் நம்மிடம் வரும் என்ற கருத்து நமக்குப் புலப்படுவதில்லை.

200 அல்லது 300 ஆண்டுகட்குமுன் விவசாயி அறுவடை சமயம் மட்டும் பணத்தைப் பார்ப்பான். அது செலவானால் பணம் அடுத்த அறுவடையில்தான். எனவே சிக்கனம் நமது பிறப்புரிமை. மாதச் சம்பளம் பெறுபவர் மாதாமாதம் பணத்தைப் பார்க்கிறார். விவசாயிக்கு அந்த அனுபவமில்லை. வியாபாரியிடம் பணம் தினசரி வரும், போகும். இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது 80% விவசாய நாடாக இருந்தது. சிக்கனம் விவசாயியின் குணம். அது அவன் தவறல்ல, பழக்கம் மாறாது. அந்த நாளில் பெரும்பாலும் கூலி பணமாகக் கொடுப்பதில்லை. வேலை செய்தால் சோறு போடுவார்கள்.

அதுவே கூலி. வீட்டு வேலைக்கு மாதம் ½ ரூபாய் கூலி கொடுத்த காலம் அது. எப்படி மக்கள் தாராளமாகச் செலவு செய்வார்கள். அந்த அரை ரூபாய் இன்று ரூபாய் 3000/-. நம் நாட்டில் இந்தக் கூலி வழங்கிய நாளில் இங்கிலாந்தில் 1 நாளைக்குக் கூலி 1½ ரூபாய், அமெரிக்காவில் 10 ரூபாய். அவை பணக்கார நாடுகள். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், கத்தியைத் தீட்டினால் கூராகும், பழகாத கத்தி துரு பிடித்து விடும். தாயார் குழந்தையைப் பிரிந்திருந்தால் குழந்தைக்குத் தாயாரை அடையாளம் தெரியாது.

**பணம் புழக்கத்தால் பெருகும் என்ற கருத்து**

நம் நாட்டிற்குப் புதியது. உலகுக்கே புதியது. அது அன்னையின் முக்கிய கருத்தில் ஒன்றாகும். வெட்ட வெட்ட துளிர்க்கும் வேலங்காடு. தலைமுடியை வெட்டினால் வளரும். தெய்வமே துதி பாடினால் மகிழ்ந்து வரம் தரும்.

**விவசாயம் பயிரிட்டுச் சாப்பிடலாம்.**

**வியாபாரம் பணம் பெருகும் துறை.**

கடல் கடந்து வாணிகம் செய்தனர். பட்டினத்தார் செட்டியார், வாணிகன், ஏராளமான பொன்னும் மணியும் குவிந்த வீடு அவருடையது. விவசாயிக்கு அந்த வாய்ப்பில்லை, கோவலன் செல்வன். பணம் வியாபாரத்தால் வந்தது. உழுபவன் கணக்குப் பார்த்தால் உழவுகோலும் மிஞ்சாது என்பர். நெல் பயிரில் ஏக்கரில் 30 ரூபாய் நிகர லாபம் கிடைக்கும்பொழுது கரும்பு பயிரிட்டு ஆலைக்குச் சப்ளை செய்தால் 150 ரூபாய் நிகரமாக இலாபம் நிற்கும். கரும்புக்குப் பணப் பயிர் எனப் பெயர். ஏனெனில் கரும்பு சர்க்கரையாகி விலை போகிறது. ஆலையுள்ள பகுதிகளில் கல் வீட்டுக்காரன் எனில் கரும்பு குடித்தனக்காரன் என்பார்கள். அந்த நாளில் ஒரு பணம், இரண்டு பணம் எனப் பேசுவார்கள். பணம் என்றால் ரூபாயில்லை, இரண்டணா. (12 பைசா) ரூபாயை எளிய மக்கள் காண்பது அரிது. ஒரிஸ்ஸா விவசாயி ரயிலில் பிரயாணம் செய்தவர் அன்னையைப்பற்றி



பேசுவதைக் கேட்டு நெகிழ்ந்து கண்ணீர் விட்டு வேஷ்டியில் முடிந்து வைத்திருந்த 1 ரூபாயை எடுத்துக் கொடுத்து "இதுவே என் சேமிப்பு. அன்னையிடம் சேர்ப்பிக்க வேண்டும்" என்றார். அன்னை அந்த ரூபாயைப் பெற்று மகிழ்ந்தார். திருமணங்களில் வரிசையென 1 ரூபாய் வைப்பார்கள். புரோகிதர் அதை 1 கோடி கட்டி வராகன் என்பார். 1958-இல் நான் ஆசிரமம் வந்தபொழுது காணிக்கையாக 1 ரூபாய் வரும். மணியார்டரில் அன்னையே கையெழுத்திட்டு வாங்குவார்.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்திற்குக் குபேர சொத்துள்ள இடம் எனப் பெயர். தாசீல்தார், சப் இன்ஸ்பெக்டர், சப் ரிஜிஸ்ட்ரார், சப் மாஜிஸ்ட்ரேட் போன்ற ஆபீசர்கட்கு ஆரம்ப சம்பளம் ரூபாய் 60. அன்னை அன்று ஒரு சாதகருக்கு 75 ரூபாய் செலவு செய்தார். குபேர சொத்தல்லவா? அன்னை 1920-இலிருந்து 1942-வரை தன் சொந்த பணத்தால் ஆசிரமத்தை நடத்தினார்.

## ஜீவிய மணி

*ஊர் என்பது சமூகம். அது உணர்வால் செயல்படுவது நம்பிக்கையால் செயல்பட்டால் மனிதன் உணர்விலிருந்து உயர்ந்து அறிவுக்கு வந்ததாகப் பொருள். அது சமூக வளர்ச்சியல்ல, பரிணாம வளர்ச்சி. பரிணாம வளர்ச்சி என்பதாலும், மனம் செயல்பட ஆரம்பித்துவிட்டது என்பதாலும் அதற்குச் சக்தி அதிகம். உடலுக்குரிய வாழ்வு முதற்கட்டம், உயிருக்குரிய வாழ்வு அடுத்த கட்டம், மனத்திற்குரிய வாழ்வு அதற்கும் அடுத்தது. ஆன்மிக வாழ்வு உயர்ந்தது.*

**சத்திய ஜீவிய வாழ்வு முடிவான தெய்வீக வாழ்வு.**

# ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவு: திரு. M. ஜகந்நாதன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 06.09.2015

1. *பொய்யான தோற்றத்தை அறிவுக்கேற்றது போல் ஏற்பதை மனிதன் விவேகம் என்கிறான். விவேகம் திரைக்குப்பின் ஊடுருவிக் காணவல்லது. பகுத்தறிவு விவரங்களை நிர்ணயிக்கிறது. அவற்றை வேறுபடுத்திக் காண்கிறது. பகுத்தறிவு பிரிக்கிறது. விவேகம் எதிரானதை இணைக்கிறது. சுமுகமான இணைப்பு விவேகத்தின் இலட்சியம்.*

தோற்றம் பொய்யென மனிதனால் அறிய முடியவில்லை. திருட்டுக் காவல்காரனின் பணிவான நடத்தை தோற்றம். பொய்யெனத் தெரிவதில்லை. விவேகம் தோற்றமென்ற திரைக்குப் பின்னுள்ள நோக்கத்தையறியும். அது நிலைமையுடன் பொய்யான பணிவை இணைத்துப் பார்க்கும். திருட்டு வெளிவரும். பிரச்சனை விலகும். வியாதி தோற்றம். தோற்றத்தை நம்புபவன் வைத்தியம் செய்கிறான். நான் அன்பன். எனக்கு வியாதி வராது. இது தோற்றம். தோற்றத்தை நம்பாமல், என் நம்பிக்கையை நம்புவேன் எனில் வியாதி சிறுநீரகக் கல் மஞ்சள் காமாலை போல் விலகும். விவேகம் நம்பிக்கையையும், பலனையும் சுமுகமாக இணைக்கும். அறிவு பிரிக்கும், பிரித்ததை முடிவாகக் கருதும். அது பிரச்சனை. விவேகம் பிரிக்காது. பிரிந்ததை சுமுகத்துள் சேர்க்கும். அது பிரச்சனையைத் தீர்க்கும், சில சமயம் பிரச்சனையை வாய்ப்பாக்கும். சர்க்கார் மனையை எடுத்துக் கொண்டு ஆர்டர் போட்டதை அறிவு முடிவாகக் கருதுகிறது. அன்பர் அன்னை தரிசனம் செய்தவர் என்பது பின்னணியில் உள்ள வாய்ப்பு. ஆர்டர் முடிவில்லை. பிரச்சனையை அன்னை தரிசனத்துடன் சுமுகமாக இணைத்தால் ஆர்டர் ரத்தாகும். பெரும் செலவு ஒன்றன்பின் ஒன்றாக இரண்டுள்ளது. ஒரு செலவுக்கே



வழியில்லை. அறிவு பிரச்சனையை நம்பிக்கையிலிருந்து பிரிக்கிறது. பிரித்தது முடிவு. முடிவு முடியாது எனக் கூறுகிறது. மனம் அதை ஏற்கிறது. பிரச்சனை தீரவில்லை. ஆன்மாவுக்கு விவேகம் உண்டு. விவேகம் பிரிக்காது. இணைக்கும். சுமுகமாக இணைக்கும். "எனக்குப் பக்தி நம்பிக்கையுண்டு." அது விவேகத்தின் கண்ணுக்குப் புலப்படும். பிரச்சனையை நம்பிக்கையுடன் இணைத்தால் சுமுகம் எழும். புது வாய்ப்பு எழும். இரண்டு பிரச்சனைகளும் எதிர்பாராதது போல் தீரும். அன்னையைத் தரிசித்தவர் அன்னையை மறப்பது வழக்கம். அன்னை மறப்பதில்லை. அவர் நினைவு எதிர்பாராத வாய்ப்பாக வரும். **IAS Special Recruitment** வருவதுண்டு. அது 40 வயது வரை உள்ளவர்க்குதவும். ஒரு அன்பருக்காகவும் அன்னை அவர் போன்ற அனைவருக்காகவும் சலுகை வழங்குவது அன்னையின் பிரபஞ்ச அம்சம். பஸ் ஓர் ஊருக்கோ அல்லது ஒருவருக்காகவோ மட்டும் ஓடாது. பஸ் அனைவருக்கும் உண்டு. அன்னையின் செயல்கள் பிரபஞ்ச செயல்கள் **(impersonal, Universal)**. யாருக்காக வாய்ப்பு வந்ததோ அவர் அறிவைப் பயன்படுத்தினார். இருப்பது 8 இடம். 8 பேரை எடுக்கப் போகிறார்கள். 80/- ரூபாய் மாதச் சம்பளம். தகப்பனார் மேஸ்த்திரி என்றால் என்ன மார்க் வாங்கினாலும் எடுபடாது என நினைத்து போக வேண்டாம் என முடிவு செய்தார். தான் அன்னை தரிசனம் செய்ததையும் தனக்கு **General Knowledge**-இல் உள்ள பெரும் திறமைகளையும் மறந்தார். மேலும் அவருடைய ஆங்கிலப் புலமையின் பெருமையையும் அவர் அறியவில்லை. பிரச்சனையை 80/-ரூபாய், மேஸ்த்திரி என நிர்ணயம் செய்தார். பிரித்துப் பகுத்தார். பிரிவினையை ஏற்றார். பரிட்சைக்குப் போகவில்லை. கல்லூரிப் பேராசிரியராக ஓய்வு பெற்றார். அவர் பகுத்தறிவுவாதி. 80/-ரூபாய் ஒரு மாத சம்பளம். இருப்பது 8 இடம். பெற்றோர் நிலை வேலைக்குக் குந்தகம். அவர் பிரித்துப் பகுத்து நிர்ணயம் செய்தவை அறிவுக்குப் பொருத்தம். வாழ்வு அறிவால் நடத்தப்படவில்லை. அறிவு முடிவு தரும் எனில் அவர் எடுத்த முடிவு சரி. நடந்தது என்ன? அவருடன் வேலை செய்தவர் விண்ணப்பித்தார்.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். **General Knowledge**-லிலும் ஆங்கிலப் புலமையிலும் அவர் மிகவும் பின் தங்கியவர். இவருக்கு வந்த வாய்ப்பு அவருக்குப் போயிற்று. அன்னை கொடுத்த வாய்ப்பு என்பதற்கு அடையாளம் எல்லாக் கட்டங்களிலும் தெரிந்தது. அவர் **United Nations**-க்குப் போனார். இந்திரா காந்திக்கு செக்ரடரியானார். 3 முறைகள் கவர்னரானார். ஜனாதிபதி தேர்தலுக்கு அவரை நியமிக்க விரும்பினார்கள். இது எந்த **IAS** ஆபீசரும் பெறாத பேறு. அன்னை கொடுத்த வாய்ப்பு என்பதன் முத்திரை. சென்னை கவர்னராக 50 ஆண்டுகள் கழித்து அவர் வந்த பொழுது அவரைச் சந்தித்தவர்களிடம் அன்பரைப்பற்றி விசாரித்தார். சுமுகம் வாய்ப்பால் எழுவது. நம் திறமைக்கும் வாய்ப்புக்கும் உள்ள சுமுகம் **creative** படைப்புத் திறனுள்ளது. அன்பர் பரீட்சை எழுதியிருந்தால் நேர்முகத் தேர்வில் மேஸ்த்திரி மகனாக இருந்தும் இவ்வளவு உயரம் அறிவு வளர்ந்ததைப் பாராட்டி, அவர் ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்து தேர்ந்தெடுத்திருப்பார்கள். நாட்டின் ஜனாதிபதியாகியிருப்பார். இது ஆன்மாவின் விவேகம் அறிவது. அன்பர் வாழ்வில் உள்ள வாய்ப்பை அன்பரால் அறிய முடிவதில்லை. சந்தர்ப்பத்தால் சேவை செய்ய வேண்டியிருக்கும். அது அவர் குதர்க்க புத்தியைத் தாண்டி தரிசனத்திற்கு அழைக்கும். அவர் போற்றும் அபரிமிதமான செல்வம் தரும். மனிதன் குறையுடையவன். அவன் அறிவு குறையை அறியும். அதையே முடிவாகக் கருதும். தன் நிறைவை மனிதன் அறிவதில்லை. இல்லாத பெருமையை அறிவான். அது நிறைவில்லை. தனக்குத் தொந்தரவு விலக ஒருவரை அன்னையிடம் அறிமுகப்படுத்துவதுண்டு. அது எவ்வளவு பெரிய சேவை, அதன் பலன் என்ன என்பதையும் மனிதன் அறிய முடிவதில்லை. தன் பக்தி பிறருக்குப் பலிப்பதைக் கண்டும் நம்பிக்கை எழுவதில்லை. அருகிலிருந்தும் நம்பிக்கை எழுவதில்லை. இதெல்லாம் செய்வது பகுத்தறிவு.

(தொடரும்)



# The Life Divine – Outline
## தமிழ்

கர்மயோகி

1904-ஆம் ஆண்டு இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் வேண்டும் என பகவான் ஸ்ரீ அரவிந்தர் பிரகடனம் செய்தார். 1906-இல் அரசியலில் இறங்கினார். 1908-இல் ஜெயிலுக்குப் போனார். நாராயண தரிசனம் பெற்றார். சுதந்திரம் அவர் ஜீவனை நிரப்பியது. இறைவன் அசரீரியாக அவரிடம் இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது. உனக்கு வேறு வேலையுண்டு. புதுவைக்குப் போ என்றார். 1910-இல் பகவான் புதுவைக்கு வந்தார். சுதந்திரத்திற்காக பகவான் யோகத்தை நாடினார். தான் அவதார புருஷன் என்பது அவர் அறியாதது. ரிஷிகள் செய்த யோகம் 20, 30, 40 வருடங்கள். அவை அவருக்குச் சில ஆண்டுகளில் பலித்தன. அவருக்குரியது ஞானயோகமில்லை. சுவாமி விவேகானந்தர் கனவில் தோன்றி சத்திய ஜீவியத்தைக் காட்டினார். கீதையைக் கையில் கொடுத்தார். 15 நாட்கள் தொடர்ந்து வந்தார். பகவான் சத்திய ஜீவியத்தை ஏற்றுக்கொண்டவுடன் சுவாமி நின்று விட்டார்.

***நாராயண தரிசனம் சத்திய ஜீவிய தரிசனம்***
***உலகில் தீமையில்லை எனக் காட்டிய தரிசனம் அது.***

கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு அளித்த விஸ்வரூப தரிசனத்தில் நல்லதும், கெட்டதும் உண்டு. சத்திய ஜீவிய தரிசனத்தில் கெட்டது இல்லை. பகவான் சத்திய ஜீவியத்தை அறிந்து கொண்டார். அங்குச் சென்றால் அது உலகுக்கு வரும் எனவும் கண்டார். அப்படி நிரந்தரமாக அங்குப் போகும் வழியறிய 10 ஆண்டுகளாயின. 10-ஆம் ஆண்டு அவர் கண்டது:-

மனம் மனிதனுடைய கருவி. மனம் முடிவாகக் கண்டது அக்ஷர பிரம்மம். அதையே ரிஷிகள் பிரம்மம் என உணர்ந்தனர். அது மேல்மனத்திற்குரிய சித்தி. அகந்தை அழியாமல் பெறும் சித்தி. அதைச் சாட்சி புருஷன் என்கிறோம். இந்நிலையில்

உலகில் தீமை அழியாது. இது ஞான யோகம். நிஷ்டையால் பெறுவது.

அக்ஷரப் பிரம்மத்தைக் கடந்த நிலையில் சத்தும், அசத்தும் இணைந்து பிரம்மம் எழுகிறது. இது பூரண பிரம்மம். இது சத்திய ஜீவியத்தால் அடையப் பெறுவது. அடிமனம் தரும் சித்தியிது. இதையடைய நிஷ்டை போதாது. சரணாகதி தேவை. இதற்குரிய மார்க்கம் மேல்மனத்திலிருந்து உள்மனம் வழி அடிமனம் சென்று உயர வேண்டும். அதன் முதல்நிலை மனத்தில் சைத்திய புருஷனைக் காண்பது. அது கீழும் மேலுமாக வளர்ந்து சத்திய ஜீவனாகிறது.

சிருஷ்டி எப்படி ஏற்பட்டது என்பது ரிஷிகள் அறியாதது. கடவுள் உலகைப் படைத்தார் என்றனர். குயவன் களிமண்ணிலிருந்து பாண்டம் செய்வது போல் கடவுள் மனிதனைப் படைத்தார் எனப் பாமர மனம் நினைக்கிறது. கடவுள் என்பது ஏகன் **(One)**, உலகம் அநேகன் **(Many)**. ஒன்று எப்படிப் பலவாயிற்று எனக் கேட்கும் உரிமை நமக்கில்லை என்றார்கள். அதுவே சரியென்றார் பகவான்.

சிருஷ்டி ஏற்பட்ட வழி அகம் புறமானது என்பது பகவான் விளக்கம். அதன் முறைகள் சுயசிந்தனை, சுயக்கட்டுப்பாடு, சுயமாகக் கிரகிப்பது என்றார். பிரம்மம், அகம், சச்சிதானந்தம் புறம் என்ற முதல் நிலை இரண்டாம் நிலையில் சச்சிதானந்தம் அகம், சத்திய ஜீவியம் புறம் என்றும், மேலும் காலத்தைக் கடந்த சத்திய ஜீவியம் அகம், காலத்திற்குட்பட்ட சத்திய ஜீவியம் புறம் எனவுமாகி அவற்றிடையே மனம் உற்பத்தியாகி சிருஷ்டி முடிகிறது. வாழ்வும், ஜடமும் மனம் உற்பத்தி செய்தவை.

**மீண்டும் ஒரு முறை கூறினால்:**

பிரம்மம் சிருஷ்டிக்க முடிவு செய்து தன்னை அகமாகவும், புறமாகவும் பிரித்தது. அப்படியேற்பட்ட புறத்தை நாம் சச்சிதானந்தம் என அறிவோம். மீண்டும் அதே முறையைக் - அகம், புறம் - கையாண்டு சச்சிதானந்தம் அகம், புறம் எனப் பிரிந்தது.



**அப்படியேற்பட்ட புறம் சத்திய ஜீவியம்.**

*மேலும் சத்திய ஜீவியம் அகம், புறம் எனப் பிரிகிறது.*

**அவற்றிடையே மனம் உற்பத்தியாகிறது.**

*மனத்துடன் சிருஷ்டி முடிகிறது.*
*வாழ்வும், உடலும் மனத்தால் உற்பத்தி செய்யப்பட்டவை.*
*உடல் பரிணாம வளர்ச்சியால் வாழ்வாகி, வாழ்வு மனமாகிறது.*
*பரிணாம வளர்ச்சியால் ஏற்பட்ட மனம் மனிதன்.*

இந்தப் பரிணாம வளர்ச்சி உடலிலிருந்து மனமாக 5 இலட்சம் வருடமாயிற்று என்றது விஞ்ஞானம். மனத்தையுடைய மனிதன் மேலும் பரிணாம வளர்ச்சியால் சத்திய ஜீவனாக 30,000 வருஷமாகும், யோகத்தால் 30 ஆண்டுகளில் சாதிக்கலாம் என்கிறார் பகவான்.

**The Life Divine** இரண்டு புத்தகங்களாகவும், இரண்டாம் புத்தகம் இரு பகுதிகளாகவும் மொத்தம் 56 அத்தியாயங்கள் கொண்டது. முதற்புத்தகம் சிருஷ்டி, 28 அத்தியாயங்கள். இரண்டாம் புத்தகம் பரிணாமம், 28 அத்தியாயங்கள்.

சிருஷ்டி என்பதை பரம்பொருள் பிரபஞ்சமாயிற்று எனவும், பரிணாமம் என்பதை முதற்கட்டத்தில் ஞானம் அஞ்ஞானத்திலிருந்து பரிணாமத்தால் வெளிவருவதாகவும், இரண்டாம் கட்டத்தில் ஆத்மா பரிணாமத்தால் ஞானத்திலிருந்து வெளிவருவதாகவும் எழுதுகிறார்.

*முதற்புத்தகம்*
**பரம்பொருள் பிரபஞ்சமாயிற்று.**

*இரண்டாம் புத்தகம்*
**பரிணாமத்தால் ஞானம் அஞ்ஞானத்திலிருந்து எழுகிறது.**

*இரண்டாம் புத்தகம் - முதற்பகுதி*
**அனந்த ஜீவியமும் அஞ்ஞானமும்**

*இரண்டாம் புத்தகம் - இரண்டாம் பகுதி*
**ஞானமும் ஆன்மிகப் பரிணாமமும்**

## முதற் புத்தகம்:

பரம்பொருள் பிரபஞ்சமாகிறது என்பதை சச்சிதானந்தம் பிரபஞ்சமாகிறது எனக் கொள்கிறார். சச்சிதானந்தத்தைப் பரம்பொருளாகக் கொள்கிறார். சத்து, சித்து, ஆனந்தம் என்ற பரம்பொருள் தெய்வீக ஆத்மா, மனம், வாழ்வு, சைத்திய புருஷன், உடல் என்ற பிரபஞ்சமாக சத்திய ஜீவியத்தால் சிருஷ்டிக்கப்பட்டதை மாயையின் செயலாக விவரித்து பரிணாமம், சிருஷ்டி, திருவுருமாற்றம் என்ற 3 அத்தியாயங்களை பின்னரும் 8 அத்தியாயங்களை முன்னுரையாகவும் சேர்க்கிறார். அவை பின்வருமாறு:-

| அத்தியாயம் | பொருள் |
|---|---|
| 1 | மனித ஆர்வம் |
| 2, 3 | ஜடம், பிரம்மம் |
| 4 | எங்கும் நிறை பரம்பொருள் |
| 5 | மனிதனுடைய இலட்சியம் |
| 6 | ஆன்மிக மனிதன் |
| 7 | அகந்தை |
| 8 | வேதாந்த ஞானம் |
| 9 | சத் புருஷன் |
| 10 | சித் சக்தி |
| 11, 12 | ஆனந்தம் |
| 13 | தெய்வீக மாயை |
| 14 | சத்திய ஜீவியம் |
| 15, 16 | சத்திய ஜீவியம் (காலம், இடம்)<br>சத்திய ஜீவிய 3 நிலைகள் |
| 17 | தெய்வீக ஆன்மா |
| 18 | மனம் |
| 19, 20, 21, 22 | வாழ்வு, மரணம், அன்பு, தீர்வு |
| 23 | சைத்திய புருஷன் |
| 24 | ஜடம் |
| 25 | ஜடத்தின் முடிச்சு |
| 26 | பரிணாமம் |
| 27 | சிருஷ்டி |
| 28 | திருவுருமாற்றம் |



சச்சிதானந்தம் (அத்தியாயம் 9, 10, 11, 12) சத்திய ஜீவியத்தால் (14) தெய்வீக ஆன்மா, மனம் (18), வாழ்வு (19, 20, 21, 22), சைத்திய புருஷன் (23), ஜடம் (23, 24) என்ற பிரபஞ்சமாக சிருஷ்டிக்க உதவியது தெய்வீக மாயை (13). 26-ஆம் அத்தியாயம் பரிணாமத்தையும், 27 சிருஷ்டியையும், 28 திருவுருமாற்றத்தையும் கூறுகின்றன.

முதல் அத்தியாயம் மனித எழுச்சி ஜடம், பிரம்மம் என்ற இரு பிரிவுகளைக் (2,3) கண்டு, பரம்பொருளில் (4) முடிகிறது. ரிஷிகள் அகந்தையை (7) ஆத்மா எனக் கருதி 4 சூத்திரங்களைக் கண்டது வேதாந்த ஞானம் (8). இந்த எட்டும் முன்னுரை.

(தொடரும்)

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஏழு தத்துவங்கள் சிருஷ்டியிலும் பரிணாமத்திலும் செயல்பட இயற்கை அரங்கமாகிறது.

## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

ஒரு 19 வயது பையனுக்குக் கான்சர் வந்து மோசமான நிலையை அடைந்து, டாக்டர்கள் இன்னும் எத்தனை மாதம் என்று அறுதியிட்டபின், அவன் படுக்கையாக இருந்தபொழுது அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டனர். இனி எதுவும் இல்லை என்ற நிலை வந்தபின், பையனை ஆசிரமம் அழைத்து வந்தால் ஒருவேளை நல்லது நடக்காதா என்ற எண்ணம் தோன்றிய-பொழுது, பையன் எழுந்து நடமாட முடியாத நிலையில் இருப்பதால் அதைக் கைவிட்டனர். ஆனால் பையன் பிடிவாதமாக எப்படியாவது தன்னை அழைத்துப் போக வேண்டும் என்றதன் பேரில் நாற்காலியில் உட்கார வைத்துத் தூக்கி வந்து பஸ்ஸில் ஏற்றி பாண்டிச்சேரி கொண்டுவந்தனர். பாண்டி பஸ் ஸ்டாண்டில் நாற்காலி தேடிப்போன தகப்பனார் திரும்புவதற்குள் பையன் இறங்கி ரிக்ஷா வரை மெதுவாக நடந்து வந்தான். சந்தோஷப்பட்ட பெற்றோர்கள் அவனை அன்று ஆசிரம **(Jan. 1) Q** வரிசைக்கு கொண்டு வந்தனர். அன்று சுமார் 1 1/2 மைல் அவனால் நடக்க முடிந்தது. இதுவே பொதுவான பலன். ஆசிரமச் சூழலுக்கு உள்ள திறன். அந்தச் சூழல் புதுவையிலிருந்து 7 1/2 மைல் அளவுக்குப் பரவியிருக்கிறது.

ஒருவர் பெரிய ஆஸ்பத்திரிக்கு வந்து, அவருக்கு சிகிச்சைக்குப் பதிலாக ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்றனர். அவர் ஆடிட்டர். ஆப்பரேஷன் ஆயிற்று. வியாதி போகவில்லை. வேலூர் சென்று காண்பித்தார். அவர் வியாதியை நிர்ணயித்து மாத்திரை கொடுத்தனர். உடனே குணம் தெரிய ஆரம்பித்தது. முதல் ஆஸ்பத்திரியில் செய்த ஆப்பரேஷன் தவறு, இல்லாத வியாதிக்காகச் செய்த ஆப்பரேஷன் என்றும் தெரியவந்தது. வீடு திரும்பினார். ஆனால் ஒரு நாளைக்கு 8, 10 மாத்திரைகள் சாப்பிட வேண்டும் என்ற நிலையும், வாழ்க்கையே



மாத்திரையால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற நிலையும் இரண்டு வருஷங்கள் நீடித்தபின் ஆசிரமம் வந்தார். புதுவை வந்தாலே புத்துணர்வு வருகிறது என்று கண்டார். **Blessing Packet** பெற்றார். வியாதியே முழுமையாகப் போய்விட்டதுபோல் உணர்ந்தார். 20, 25 நாட்கள் வரை இந்தப் புதிய தெம்பு இருப்பது வழக்கம். கடைசி 5, 10 நாளில் ஓரிரு மாத்திரை சாப்பிட வேண்டி இருக்கும். அடுத்த **Blessing Packet** புதிய தெம்பை மீண்டும் அளிக்கும். வியாதியின் வேர் அற்று வருகிறது. தம்பியின் வாழ்வில், தங்கைக்கு அமைந்த வாழ்வில், கிராமத்திலுள்ள நிலத்தின் வருமானம், செய்யும் தொழில், நட்பு, உறவு ஆகிய அனைத்து இடத்திலும் புதிய வாழ்வு ஏற்பட்டது. 7, 8 மாதங்களில் வியாதியே மறந்துபோய்விட்டது. மீண்டும் அவர் காணிக்கை அனுப்பிக்கொண்டிருந்தார். இனி காணிக்கை அனுப்பத் தேவையில்லை என்று மற்றவர்கள் கருதினர். கடந்த 12 வருஷங்களாக அவர் காணிக்கையைத் தொடர்ந்து அனுப்புகிறார். அதை நிறுத்த மனம் இல்லை என்று சொல்வது வழக்கம்.

17 ஆண்டுகளாக உள்ளங்கையில் பொறுக்க முடியாத வலி உடைய ஒருவர் கையெழுத்துப் போட்டால் கை வலிக்கிறது என்பார். நண்பர்களுடன் சமாதிக்கு வந்தவர் கை சமாதியில் பட்டவுடன் வலி குறைவதைப் பார்த்தார். அது என்ன இடம் என்று கேட்டார். தெய்வ நம்பிக்கை இல்லாதவர், கை வலிக்காக அடிக்கடி புதுவை வந்து சமாதியைத் தொட விரும்பினார். இரு முறை வந்தார். கை வலி முழுவதுமாக விலகியது. தொடர்ந்து வர வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது.

60 வயதைத் தாண்டிய பெண்ணுக்குச் சர்க்கரை வியாதிக்காக கடந்த 12 வருஷமாக சிகிச்சை செய்து, தினமும் 3 ஊசி போட ஏற்பாடாயிருந்தது. மகன்கள் படித்தவர்கள்; தாயார் கிராமத்தில் இருக்கிறார். தினமும் ஊசி போட்டுக்கொள்ள பிரியப்படாததால் தாயார் அதை நிறுத்திவிட்டார். கால் கட்டி வந்து சீழ் நிரம்பி வலி தாங்காமல் பெரிய ஆஸ்பத்திரிக்கு 12 வருஷமாகப் பார்த்துவந்த டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். ஆஸ்பத்திரியில்

சேர்த்து விட்டார்கள். டாக்டருக்கு நம்பிக்கையில்லை. ஆஸ்பத்திரியிலுள்ள மற்றவர்கள் காலை எடுக்க வேண்டும் என்று பேசுவது மகனுக்குத் தெரிந்தது. மற்ற டாக்டர்களை விசாரித்தார். காலை எடுத்தால் மட்டும் உயிர் பிழைக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். மகன் பதறிப்போய் டாக்டரிடம் ஓடினார். டாக்டருக்குக் கோபம். "படித்தவர்கள் இப்படி அலட்சியமாக இருந்து காலம் கடந்த நேரத்தில் வந்தால் நான் என்ன செய்ய முடியும்? முடிந்ததைச் செய்கிறேன். ஒன்றும் கேட்க வேண்டாம்" என்றார். இதுவரை கோயிலுக்கே போகாதவர், சாமி கும்பிட நினைத்தார். என்னிடம் வந்து, "ஏதாவது செய்ய முடியுமா?" என்று கேட்டார். "தாயாருக்கு நம்பிக்கை இருக்கிறதா?" என்றேன். "அவர்களுக்கு எதுவும் தெரியாது" என்றார். "நம்பிக்கை முழுமையாக இருந்தால் நல்லது" என்ற கருத்தை ஏற்றுக்கொண்டார். தானே நம்பிக்கையுடன் பிரார்த்திப்பதாகச் சொல்ல விரும்பினார். ஆனால் நாத்திகவாதத்தை விட்டுவிட மனமில்லாமல் போராடினார். ஒருவழியாகப் பிரார்த்தனை செய்ய ஒத்துக்கொண்டார். "அரைகுறையான பிரார்த்தனைக்கு முழுப் பலன் எதிர்பார்க்க முடியாது. முழு நம்பிக்கையுடனும், முழு மனதுடனும் பிரார்த்தனை செய்தால்தான் இந்த விஷயம் பிடிபடும். மேலும் இது மற்றவர் செய்யும் பிரார்த்தனையாக இருப்பதால் தீவிரமாக இருக்க வேண்டும்" என்றேன். மேலும் சில முறைகளைப் பின்பற்ற வேண்டியிருப்பதால், நாத்திகத்திற்கும், வறட்டுப் பிடிவாதத்திற்கும் இடமில்லை என்பது புரியும்படி விளக்கமாகச் சொல்லியபின், தாமே தாயாருக்காகப் பூரணமாகப் பிரார்த்தனை செய்ய முன்வந்தார். தாயார் நினைவு வரும்பொழுதெல்லாம் அதை ஒதுக்கி, அன்னையை நெகிழ்ந்த உணர்வோடு நினைவுகூர்தல் வேண்டும் என்பதை மட்டும் முக்கியமாகச் சொன்னேன். சாமந்திக்கு (**life energy**) சக்தி என்ற பெயர். அவருடைய கம்பெனி பாண்டியிலிருப்பதால் அதன் மூலம் தினமும் ஒரு கிலோ சாமந்தி வாங்கி சமாதிக்கு வைக்கும்படியும் சொன்னேன். கால் குணமாகும் வேகம் ஆஸ்பத்திரியிலுள்ள அனைவரையும்



ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தோலை (**skin graft**) காயத்தின் மீது தைக்க வேண்டும் என்றார்கள். பிறகு அதுவும் தேவையில்லை என்றார்கள். கால் குணமாகி ஆஸ்பத்திரியை விட்டு அந்த அம்மாள் வரும்பொழுது, அவரைப் பலரும் சூழ்ந்து 'அதிர்ஷ்டக்காரர்' என்று பாராட்டியபோது, ஒரே ஒரு டாக்டர் மட்டும் மகனைத் தனியே அழைத்து "உங்கள் தாயார் காலோடு நடப்பதை என்னால் பார்த்தும் நம்ப முடியவில்லை" என்றார்.

ஒரு நாள் காலையில் 10, 11 மணியிருக்கும். ஒரு டெலக்ஸ் செய்தியை அவசரமாகக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்கள். 'அமெரிக்காவில் ஒரு சாதகரை இரண்டு நாள் முன்னதாக ஜுரம் என்று ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும், அன்று காலையில் டாக்டர் ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்பதாகவும், ஒரு முக்கிய உறுப்பை அகற்ற வேண்டும்; இருபத்திநாலு மணிக்குள் செய்ய வேண்டும்' என்றும் செய்தி சொல்லியது. டாக்டர் சொல்லியபடியே செய்ய வேண்டும் என்று பதில் செய்தி அனுப்பிவிட்டு, அவரைச் சேர்ந்தவர் 6 பேரை அழைத்து, "ஒன்றாகச் சேர்ந்து தியானம் செய்தால் நல்லது" என்றேன். 15, 20 நிமிஷம் தியானம் செய்து கலைந்தனர். அனைவரும் சோகமாக இருக்கும்பொழுது 2 மணி நேரத்திற்குப்பின் அடுத்த டெலக்ஸ் (**telex**) வந்தது. நோயுற்ற பாகம் வழக்கத்தைவிட 5 மடங்கு வீங்கியிருந்தது, கடந்த 1 மணி நேரத்தில் வீக்கம் குறைந்துள்ளது. இப்பொழுது வீக்கம் குறைந்திருப்பதால், டாக்டர் ஆப்பரேஷன் தேவை இல்லை எனக் கருதுகிறார் என்றது செய்தி.

வடநாட்டில் ஒரு ரயில்வே ஊழியர். 35 ஆண்டுகட்குமுன் அவருக்கு ஒரு வகையான காசநோய். 40, 50 நாட்களுக்கு ஒரு முறை இரத்தம் வாந்தியாக வரும். படுக்கையாக இருந்து மருந்து சாப்பிட்டு, சில நாளில் குணமாகும். அன்னையைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆசிரமம் வந்தார். பாண்டிக்குப் போக இரயிலில் உட்கார்ந்ததும் தெம்பாக இருந்தது. சமாதி அருகே புதிய பலம் வருவதைப் பார்த்தார். ஊருக்குப் போய் உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டு, ஒரே சகோதரியை

அழைத்துக்கொண்டு, பாண்டியிலேயே வந்து தங்கிவிட்டார். வாந்தி 45 நாட்களுக்கு ஒரு முறை வருவது 7, 8 மாதத்தில் ஒரு முறையாகி, பிறகு நின்றுவிட்டது. 40, 50 அடிக்குமேல் நடக்க முடியாது. மற்றபடி எந்தத் தொந்தரவும் இல்லை. சில ஆண்டுகள் இங்கேயே தங்கியிருந்தபின் அன்னையின் பெயரை உச்சரிப்பது, மலர்களின் விசேஷம் ஆகியவற்றைக் கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்டு, தாமும் அது போல் ஏதாவது செய்ய வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார். அதன்படி ஒரு நாள் அவர் முடிவு செய்து, (1) நினைவை அன்னையின் பக்கம் முழுமையாகத் திருப்புவது, (2) சாமந்தி மலரை வைத்துத் தியானம் செய்வது, (3) ஒரு மணிக்கு ஒரு முறை - அதாவது மணி அடிக்கும் நேரத்தில் - தவறாமல் அன்னையை நினைவுகூர்வது என்ற 3 முறைகளையும் ஏற்றுக்கொண்டு, அரை மணி தியானம் செய்துவிட்டுப் போனார். மறுநாள் வந்தார். “நேற்றைய தினம் எனக்குப் புத்துயிரும், புதுத் தெம்பும் வந்தது. ரிக்ஷாவில் வந்தவன், ரிக்ஷாவை அனுப்பிவிட்டு, 6 பர்லாங் நடந்து வீட்டுக்குப் போனேன். என் வாழ்க்கையில் இது ஓர் அற்புதம்” என்றார்.

தோளில் வலியிருக்கிறது என்று டாக்டரிடம் காண்பித்த 25 வயதுப் பெண்ணிடம் உள்ளூர் டாக்டர் தோள் எலும்பு வளர்கிறது, ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்றார். பயந்துபோய் பெரிய ஊரில், பெரிய ஆஸ்பத்திரியில் காண்பிக்கவே, அதையே அந்த டாக்டர் சொன்னார். ஆப்பரேஷனுக்குத் தேதி குறித்துவிட்டு, ஆசிரமம் வந்து நல்ல முறையில் ஆப்பரேஷன் முடிய வேண்டி **(Blessing Packet)** பிளெஸ்ஸிங் பாக்கெட் பெற்றுக்கொண்டு ஊர் திரும்புமுன் என்னை வந்து குடும்பத்துடன் பார்த்தார்கள். ஆப்பரேஷன் அவசியம் என்று கருதினால், அன்னை ஆப்பரேஷனை நல்லபடியாக முடிப்பார். ஆப்பரேஷன் கூடாது என்று உறுதியாக நம்பினால் நல்லது என்றேன். ஆப்பரேஷனைத் தவிர்க்க ஒரு வழி இருக்கும் போலிருக்கிறது என்றதில் அவர்கள் அனைவருக்கும் சந்தோஷம். ஒரு வாரம் வரை பிரார்த்தனை



செய்யுங்கள். டாக்டரிடம் சொல்லி தேதியைத் தள்ளிப் போடச் சொல்லுங்கள். எதுவும் உங்கள் நம்பிக்கையைப் பொறுத்தது என்று சொல்லி அனுப்பினேன். அடுத்த வாரம் அனைவரும் வந்தார்கள். ஒரே நாளில் வலி முழுவதும் போய்விட்டதாகவும், ஆப்பரேஷனை மறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். பெண் மிகவும் தீவிர பக்தை ஆகிவிட்டாள்.

ரிடையரான பேராசிரியருக்கு ஒரு மகன் டாக்டர். ஒரு மகள் டாக்டர். மருமகன் டாக்டர். இவர் சுமார் 50 வருஷத்திற்குமுன் ஸ்ரீ அரவிந்தர் அன்னை தரிசனம் செய்து, பின்னால் மறந்துவிட்டவர். 20 வருஷத்திற்கு முன்னால் மீண்டும் ஆசிரமம் வர ஆரம்பித்து, 7 வருஷமாகத் தீவிரமாக வந்தவர், பின்னர் இங்கு வருவதை நிறுத்தி விட்டார். அத்துடனில்லாமல், “அன்னை லோகமாதா பாண்டிச்சேரியில் மட்டும் இல்லை; எங்கள் ஊரிலும் இருக்கிறார். இங்கிருந்தே வழிபடலாம்” என தமக்கே விளக்கம் கொடுத்துக்கொண்டார். அன்னையை எந்த ஒரு சிறு விஷயத்திற்கும் அழைத்துச் செயல்படுபவர். **(Eczema)** தோல் சம்பந்தமான வியாதி வந்து உடல் முழுவதும் கறுத்து-விட்டது. சென்னையில் தம் மகன் மூலம் ஸ்பெஷலிஸ்ட்களிடம் காட்டி 3 மாதமாக மருந்து சாப்பிடுகிறார். மருந்துக்கு ஓரளவு வியாதி கட்டுப்படுகிறது. பூரண குணம் ஆகவில்லை. இந்த வியாதி பூரணமாகக் குணமாகாது என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அன்னையை இடைவிடாது நினைப்பதால்-தான் உபத்திரவம் குறைவாக இருக்கிறது என்று மற்றவர்களிடம் சொல்லிவந்தார். ஆசிரமம் போகக்கூடாது என்ற பிடிவாதத்தை விட மனமில்லை. அன்னை அருளால் வியாதி பூரண குணம் அடையும். பிடிவாதம் குறுக்கே நிற்கிறது. அத்துடன் வியாதி குணமாகாது என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவர்மீது அளவு கடந்த அன்புடையவர் ஒருவர், அவர் முழுமையாகக் குணமடைய வேண்டும் என விரும்பிப் பிரசாதத்தை அவருக்கு அனுப்பி, தாமும் பிரார்த்தனை செய்தார். ஓரிரு நாள் பிரசாதம் வந்தவுடன் பேராசிரியருக்கு அதுவரை இல்லாத குணம் தெரிய ஆரம்பித்தது. தினமும் பிரசாதம் அனுப்பும்படிக் கேட்டார். 7-ஆம் நாள் உடல் கருமை முழுமையாக விலகி, பூரண குணம்

தெரிந்தது. கையில் மட்டும் 1/2 அங்குலத்திற்குக் கறுப்புக் குறையவில்லை. வியாதி போய் விட்டது. பேராசிரியர் தம் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

40 வயதுள்ள அம்மாள் ஒருவர் வாழ்க்கையில் பெரும் பகுதியை ஆஸ்பத்திரியில் கழித்தவர், கண் பார்வை, வயிற்று வலி, நெஞ்சு வலி, கை வீக்கம், முதுகு வலி, ஆப்பரேஷன் என்று பல வகையான வியாதிகள். அவருக்கு வசதி வந்தபின் பிரைவேட் டாக்டர்களிடம் காட்ட ஆரம்பித்தார். ஒரு வியாதி தீர்ந்தால், அடுத்தது வரும். ஏற்கனவே கவர்மெண்ட் ஆஸ்பத்திரி, இப்பொழுது பிரைவேட் நர்சிங் ஹோம்; மாற்றம் அந்த அளவில்தான் இருந்தது. என்னிடம் வந்து அவர் கணவர் இது விஷயமாகக் கேட்டார். அவருக்கு உடல்நலம் பாதிக்கப்படுவது குணவிசேஷத்தால்தான். அதை மாற்றிக்கொள்ள முன்வந்தால் பலன் இருக்கும் என்று அபிப்பிராயம் சொன்னேன். அதன் பிறகு இரண்டு வருஷம் கழித்து கை வீக்கம் அதிகமாகி, டாக்டர்களுக்குப் பிடிபடாத நிலை ஏற்பட்டபின் மீண்டும் கணவர் வந்தார். மீண்டும் அதே அபிப்பிராயம் சொன்னேன். மனைவி சம்மதிப்பதாகச் சொல்லி, என்ன செய்யலாம் என்று கேட்டார். “எனது வியாதி தீரும் அளவுக்கு என் குணத்தை மாற்றிக்கொள்கிறேன்” என்று தினமும் ஜெபம் போல் சொன்னால் போதும். பிரார்த்தனை தேவையில்லை என்றேன். மருந்துகூட சாப்பிடாமல் 3 நாளில் பாதி வீக்கமும், 7-ஆம் நாள் முழு வீக்கமும் தானே வாடிவிட்டது.

நோய் ஏற்பட்டால் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தல்; ஆசிரமத்திற்கு எழுதிப் பிரசாதம் பெறுதல்; ஒளியை, சாந்தியை அழைத்து உடலையும், நோயுற்ற பாகத்தையும் நிரப்புதல்; அன்னையின் கையால் நோயுற்ற பாகத்தைத் தடவிக் கொடுப்பதாக நினைப்பது போன்றவை பலன் தரும். இவ்வளவு செய்தும் நோய் போதிய அளவு குணமாகாவிட்டால் என்ன செய்யலாம் என்ற கேள்வியைக் கேட்க வேண்டிய சந்தர்ப்பத்தை அன்னை கொடுத்ததில்லை.

அன்னையை ஏற்றுக்கொண்டவர்களுக்குத் திடமான உடல் நலம் ஏற்பட ஒரு சுருக்கமான வழியைச் சொல்லலாம். உடல்



அன்னையை நினைவில் வைத்துக்கொண்டால் உடல் நலம் பெருகி, உடல் வெண்கலம் போல் அமையும். உடல் அன்னையை நினைப்பது என்றால் என்ன என்று கேள்வி எழும். அப்பைய தீக்ஷிதர் தமக்குச் சுவாதீனம் இல்லாத நேரத்திலும் சிவனை நினைக்க வேண்டும் என்று விரும்பினார் என்று ஒரு செய்தியுண்டு. நமக்குச் சுவாதீனம் இல்லாத நேரத்தில் நினைவு இருந்தால், அது உடல் நினைவு வைத்திருப்பதாக அர்த்தம். குளிர்காலத்தில் தூங்கும்போது அருகில் போர்வையை வைத்துக் கொண்டால், இரவில் குளிர் அதிகமாகும் நேரம் போர்வையை எடுத்து நாம் போர்த்திக்கொள்கிறோம். காலையில் பார்த்தால் போர்த்தியிருப்பது தெரியும். எப்பொழுது போர்த்திக்கொண்டோம் என்று தெரியாது. உடலே தன் தேவையை உணர்ந்து, நமக்குத் தெரியாமல் செய்த செயல் அது. உடலுக்கு நோய் என்று வந்தவுடன், மாத்திரை நினைவு வராமல், டாக்டர் நினைவு வராமல், பயம் ஏற்படாமல், கவலையுண்டாகாமல், அன்னை நினைவு வந்தால் அன்னையை உடல் நினைவு வைத்திருக்கிறதாகக் கொள்ளலாம்.

★★★

### 13. ஸ்ரீ அரவிந்தரின் எண்ணங்கள்

1. *உலகில் எந்த ஒரு புதிய மாற்றம் ஏற்பட வேண்டுமென்றாலும், முதலில் அதை ஆஸ்ரமத்தில் கொண்டுவர வேண்டும்.*

   பிரபஞ்சத்திலுள்ள எல்லா அம்சங்களும் பூமியில் இருக்கின்றன. பூமி பிரபஞ்சத்தின் பிரதிநிதி. அதேபோல் பூமியில் உள்ள எல்லா அம்சங்களையும் ஒன்று சேர்த்து ஸ்ரீ அரவிந்தாஸ்ரமம் அமைக்கப்பட்டுள்ளது. புதியதாக இங்கு எது செய்தாலும் அது உலகத்தில் பரவும். யோகத்திற்காக ஆஸ்ரமம் ஏற்படுத்தியதுபோல், வாழ்க்கைக்காக அன்னை ஆரோவில் நகரை நிர்மாணித்தார். 3-வது உலக யுத்தத்தைத் தடுப்பதற்காக அன்னை செய்த யுக்தியிது. ஆரோவில் உள்ளவரை 3-ஆம் யுத்தம் வாராது.

மனித சுபாவத்தின் எல்லா அம்சங்களையும் பிரதிபலிக்குமாறு ஆரோவில் ஏற்பட்டுள்ளது.

2. *விதி வலியது அன்று. உரமான எண்ணங்கொண்ட மனித உள்ளத்தின் முன் விதி பின்வாங்கும்.*

விதி என்பது இறைவனால் ஏற்பட்டது அன்று. நம் முந்தைய பிறப்புகளில் ஏற்பட்ட செயல்களின் பலனே விதி என்று நாம் கூறுவது. புருஷன் என்ற ஆத்மாவும், பிரகிருதி என்ற இயற்கையும் சேர்ந்ததே சிருஷ்டி. விதி, பிரகிருதியினால் உற்பத்தியாவது. மனிதன் தன் ஆத்ம பலம் வெளிப்படும் வகையில் தெளிவு பெற்றால் விதி அதற்குக் கட்டுப்பட வேண்டியது நியாயமன்றோ? தொன்றுதொட்டு வாழ்ந்த மனிதன் ஆத்ம பலன் துறவிக்கும், பிரகிருதியின் விதி குடும்பஸ்தனுக்கும் என வாழ்ந்து வருகிறான். பிரகிருதியின் சூழலில் வாழும் மனிதன் விதியின் விலக்க முடியாத பிடியில் இருப்பதும் நியாயமே. ஸ்ரீ அரவிந்தர் மனித வாழ்வை, தெய்வீக வாழ்வாக மாற்றுவதை இலட்சியமாகக் கொண்டவர். இந்த நிலையில் உள்ள வாழ்க்கை பிரகிருதியின் பிடியில் இல்லாமல், ஆத்மாவின் ஆதிக்கத்திலிருக்கும். ஆகையால் விதி வலியதன்று.

3. *கர்மம் பாதிக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.*

விதி என்பதும் கர்மம் என்று நாம் குறிப்பிடுவதும் அடிப்படையில் ஒரே அமைப்பையுடையவை. இவை இரண்டும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டவையில்லை. மனிதன் தன் முந்தையச் செயல்களால் நிர்ணயித்துக் கொண்டவை. அதிக வலிமையுடைய கர்மத்தை விதி என்றும், மற்றவற்றை கர்மம் என்றும் நாம் குறிப்பிடுகிறோம். தன் சுபாவத்தின் பிடியில் உள்ள மனிதன் கர்மத்திற்கும், விதிக்கும் கட்டுப்பட்டே ஆக வேண்டும். தான் பிரகிருதியின் (இயற்கை) அம்சமான சுபாவத்தின் கூறு இல்லை; புருஷனான ஆத்மாவின் அம்சம் என உணர்ந்து, அதன் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட



மனிதனுக்கு, தானே ஏற்படுத்திக்கொண்ட பழைய நிலைகளை - கர்மாவை - மாற்றிக்கொள்ளும் திறன் உண்டு.

4. *விஞ்ஞானிகளும், சாதாரண மனிதனைப்போல் மூடநம்பிக்கை உள்ளவர்களே.*

ஞானம் என்பது ஒரு விஷயத்தை அது இருப்பதுபோல் அறிந்து கொள்வது. தனக்கு ஏற்கனவே தெரிந்த விஷயத்தைக் கொண்டு புதிய விஷயத்தை ஏற்றுக்கொள்ளும் மனிதன் மூடநம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறான். மின்சாரத்தைப்பற்றி விளக்கமாகக் கேட்டுக்கொண்ட அறிவிலி "எல்லாம் சரி, இந்த விளக்கில் எண்ணெய் எங்கு ஊற்ற வேண்டும் என்று சொல்லவில்லையே" என்று கேட்டதற்குக் காரணம், அவன் மின்விளக்கை, அதன் அமைப்பை, எண்ணெய் விளக்கு மூலம் புரிந்துகொள்ள முயல்கின்றான். விஞ்ஞானியின் முறை இதுவே. ஆதலால் அவர்கள் தங்கள் துறையில் ஏராளமான மூடநம்பிக்கைகளை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு குழுவினர் தங்கள் மூடநம்பிக்கைகளை நம்பாத மற்ற குழுவினரைக் கேலி செய்கின்றனர். இந்த அடிப்படையை விளக்கும் வகையில் ஸ்ரீ அரவிந்தர் ஒரு கணித மேதையும், மூடநம்பிக்கை உள்ளவனும் சந்தித்துப் பேசுவதாகவும் மேதையை அவன் கேலி செய்வதாகவும் எழுதியுள்ளார்.

5. *நோயுற்ற உடல் தன்னைத் தானே குணம் செய்துகொள்கிறது. டாக்டர்கள் உடலில் வியாதியை உற்பத்தி செய்து, பின்னர் அதை உடலின் திறத்தால் குணம் செய்கின்றனர்.*

6. *தமிழும், சமஸ்கிருதமும் ஒரே தாயின் இரு புதல்வர்கள்.*

7. *எல்லா நாடுகளும் ஒன்றிணைந்து மனித சமுதாயம் ஒருமைப்படும். எல்லா அரசாங்கங்களும் ஒரே உலக சர்க்காரின் கீழ் வர வேண்டும்.*

(தொடரும்)

## அன்பர் அனுபவம்

குழந்தை சத்யாவுக்குக் கடந்த இருபத்திநான்கு மணி நேரமாக வைரல் இன்பெக்ஷன் காரணமாக 104 டிகிரி அளவு ஜுரம். அவனது உடம்பில் பிளஸ்ஸிங் பாக்கெட் வைத்தும், பின்னணியில் ஸ்ரீ அன்னையின் ஆர்கன் இசையினை ஒலிக்கச் செய்தபடியும் ஒரு நாள் முழுவதும் அவனோடு இருந்தேன். நேரம் ஓடிக்கொண்டே இருந்ததே தவிர ஜுரம் குறையவில்லை. அவனை எழுப்பி இரண்டு வேளை மருந்து கொடுத்தேன். ஜுரம் கடுமையாக இருந்தது. அவன் ஒரு பருக்கை உணவு கூட சாப்பிடவில்லை; உதடுகள் காய்ந்து வெடிப்புடன் சிவந்து விட்டது. அதிகாலை மூன்று மணிக்கு என்னை கொதிக்கும் ஜுரம் நடுக்கலுடன் அவன் எழுப்பியபோது எனக்கு கவலை ஆனது. மூன்று போர்வைகளால் போர்த்தப்பட்டு இருந்தாலும் அவனது நடுக்கம் குறையவில்லை. அவனை எமர்ஜென்சி அறைக்கு எடுத்துச்செல்ல நான் விரும்பவில்லை. நானும் எனது கணவரும் அவனை எங்களுக்கு நடுவில் படுக்க வைத்துக்கொண்டு பிரார்த்தனை செய்யத் தொடங்கினோம்.

இறுதியாக, அன்னை அவரது அறையில் இருப்பதாய் கற்பனை செய்யத் தொடங்கினேன். தொடர்ந்து உருவகப்படுத்திக் கொண்டே இருந்தேன். அன்னையின் அறைக் காட்சி ஒரு சிறிய சினிமாப் படம் போன்று என் தலைக்குள் ஓடத் தொடங்கியது, எனது முயற்சி இல்லாமலேயே.

அன்னையின் அறையின் மத்தியில் ஒரு சிறிய படுக்கையில் அவனைக் கிடத்தி வைப்பது போன்று கற்பனை செய்தேன். அப்போது அன்னை, “அவனை அங்கேயே விட்டுவிடு” என்று சொன்னார்கள். அவனது சிறிய உடல் அந்தப் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்ததைக் கண்டேன். அவன்மீது ஒரு போர்வையும் போர்த்தப்பட்டிருக்கவில்லை. அன்னை, அறையில் அவரது வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். அன்னை அவன் படுக்கையைச் சுற்றி நடந்து அவரது அலமாரியிலிருந்து பொருட்களை எடுத்தார். சத்யாவை சிறிதும் லட்சியம் செய்யாது, அவரது டெஸ்க்கில் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டு இருந்தார். ஆனால், அவர் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்ததாக நான் என்னுள் ஒரு அழுத்தமான அமைதியை உணர்ந்தேன். இதை இந்த இருபத்தினான்கு மணி நேரத்தில் முதன் முறையாக உணர்ந்தேன்.

திடீரென எங்களுக்கு நடுவில் படுத்திருந்த சத்யா போர்வைகளை உதறிக்கொண்டு, படுக்கையை விட்டு துள்ளி எழுந்து அறையில் நடக்கத் தொடங்கினான். சாப்பிட ஏதாவது வேண்டும் எனக் கேட்டான். அவனது புத்தகங்களை படிக்கவும் அவனது விளையாட்டுச் சாமான்களை வைத்துகொண்டு விளையாடவும் ஆரம்பித்தான். ஒருநாள் முழுவதும் நடுக்கல் ஜுரத்துடன் இருந்தவன், ஒன்றுமே நடவாதது போலக் காணப்பட்டான். உடனடியாக குணமடைந்தான். அவனது அருகில் படுத்துக்கொண்டு அன்னையைக் கற்பனை செய்த அடுத்த கணம் படுக்கையை விட்டு எழுந்து விட்டான். இருபது நிமிடங்களுக்குமுன், அவன் கழிப்பறைக்குக்கூடச் செல்லத் திராணி அற்றவனாய் கொதிக்கும் உடம்புடன் கால் நடுக்கத்துடன் போர்வைகளுக்குள் ஒடுங்கி, நடக்க இயலாமல் இருந்தவனை நான் தூக்கிக் கொண்டு சென்று உதவினேன். இருபது நிமிடங்களுக்குப்பின் படுக்கையை விட்டுத் தாவி இறங்கினான்!

இந்தச் செய்தியை தங்களுக்கு இமெயில் செய்யும்போது, சாதாரண நாள் போல விளையாடிக்கொண்டும் அரட்டை அடித்துக்கொண்டும் உள்ளான். இது ஒன்றும் சாதாரணமானது அல்ல என்பது எனக்கு விளங்குகிறது. நடந்தவை அனைத்தும் அசாதாரணமானது; அனைத்தும் அற்புதமானது!

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அணுவில் வெளிப்படும் அனந்தம் முழுமையானது.

அன்னை இலக்கியம்

# மீன்கொடி

சமர்ப்பணன்

## முன்னுரை

எளிய மனிதனின் வாழ்வுகூட எத்தகைய கற்பனைக் கதையையும்விட அதிக விசித்திரமான சம்பவங்களும், நம்ப முடியாத திருப்பங்களும் கொண்டதாக இருக்கிறது. மனித வாழ்வில் நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளை கவனிப்பவருக்கு, ஒப்பிடுகையில் உலகப் பெருநாவல்களும் சிறுபிள்ளைத்தன-மானவைதான் என்பது புரியும்.

பொதுவாக கதை எழுதும்போது "இதில் வரும் மனிதர்களும், சம்பவங்களும் கற்பனையே, எவரையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சுட்டவில்லை" என்று பொறுப்புதுறப்பு அறிவிப்பார்கள். ஆனால், மெய்யென்ற ஒன்றில்லாமல் பொய் பிறக்க முடியாது என்பது படைப்பாளிகள் அறிந்த உண்மை. நிஜவுலகில் நடக்கும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில்தான் புனைவுலகம் பிறக்கிறது. வாசகரின் தீவிர ஆர்வத்திற்கும், பக்குவத்திற்கும் புனைக்கதையை நிஜக்கதையாக மாற்றும் வல்லமை உண்டு.

இன்னும் சொல்லப் போனால் வாழ்வின் விளையாடலில் உருவான பல விந்தையான நிகழ்ச்சிகளை வேறொரு நாவலுக்காக இங்கே எழுதாமல் விட்டுவிட்டேன். அவற்றையும் எழுதியிருந்தால் "இது குழந்தைகளுக்கான மாயதேவதைக் கதை" என்று வாசகர்கள் நினைத்து விட்டிருப்பார்கள். வாழ்வு செயல்படும் விதத்தை நம்பத் தயங்கும் நல்லவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையை ஆராய்ந்தால் மீன்கொடி நாவலைவிட பல மடங்கு சிறந்த மாயதேவதைக் கதையை அவர்களே எழுதி விட முடியும்.

வாசகர்களில் பலர் "இது என்ன, நம் குடும்பத்தில் நடந்ததை அப்படியே எழுதி விட்டார் போலிருக்கிறதே" என்று திகைக்கக் கூடும். "நம் வீட்டில் நடப்பது எவருக்கும் தெரியாத ரகசியம்" என்ற மனமயக்கம் இருக்கும்வரை திகைப்பு அகலாது. பணம், பெண், பதவி, உறவு சம்பந்தப்படும் இடங்களில் வீட்டிற்கு வீடு ஒரே கதைதான். கதாபாத்திரங்களின் பெயர்களும், காலமும், இடமும்தான் வேறு.

காதல் தெய்வங்களான ரதி, மன்மதன் பவனி வரும் தேரின் உச்சியில் தென்றல் காற்றில் படபடப்பது மீன்கொடி. உலகை வென்று சொக்கநாதனின் காவல் தெய்வமாக நிற்கும் அங்கயற்கண்ணியின் கோட்டையில் பறப்பது மீன்கொடி. பெண்ணாகப் பிறந்து வந்த பெருந்தெய்வத்தின் பேரருளால் வாழ்வில் சாதனை செய்த தீராக்காதலனின் கதை எனது மீன்கொடி.

என்னைப் போன்ற எளியவர்களின் பொருளறியாப் பெருவாழ்வில் ஸ்ரீ அரவிந்தரின், அன்னையின் ஆன்மிகக் கொடியை ஏற்றி வைக்கும் ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு இந்த நாவலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

***சமர்ப்பணன்***

## 1. மீசை தாத்தா ஓடிவிட்டார்

எண்பது வயதான எங்கள் மீசை தாத்தா, பேரர்களின் பாகப் பிரிவினைக்கு நான்கைந்து நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டு ஓடிப் போய்விட்டார். அவர் போனதால்தான் மற்றவர்களுக்கு பாகப்பிரிவினை செய்யும் துணிச்சலே வந்தது என்றுகூட சில உறவினர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஓடிப் போவதற்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே "எல்லோரையும்விட பரமார்த்தன்தான் அதிர்ஷ்டக்காரன்" என்று என்னைப்பற்றி மீசை தாத்தா அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். அவரையும், என் மனைவி ஜமுனாவையும் தவிர வேறு எவரும் அதை நம்பவில்லை.

வருமானமில்லாத எனக்கு பாகப் பிரிவினையில் கிடைத்தவை மயானத்தின் நடுவிலிருந்த எவரும் வாங்கத்

துணியாத நிலம், இடிந்து விழப் போகும் எண்பது வயதான ஓட்டு வீடு, மற்றும் கடன்கொடுத்தவர்கள் மட்டுமே வந்து போகும் ஓடாத பழைய கம்பெனி. ஆனாலும் என்னை அதிர்ஷ்டக்காரன் என்றுதான் ஜமுனா நினைத்தாள். “தாத்தா சொன்னால் சரியாகத்தான் இருக்கும்” என்றாள்.

மீசை தாத்தா “எண்பதில் ஓடிப்போய் விட்டார்” என்பது என் மூத்தவர்களின் சொல்லாட்சி. அவர் துறவறம் போய் விட்டார் என்று நான் நினைத்தேன். “நிறைந்த மனத்துடன் தனக்குரிய முழுமையைத் தேடிச் சென்றிருக்கிறார், நிச்சயம் திரும்ப வருவார்” என்று ஜமுனா கூறினாள். முழுமை, பூரணம் என்ற வார்த்தைகளை ஆன்மிகவாதிகளும், தத்துவமேதைகளும் எப்படி வேண்டுமானாலும் வரையறை செய்து கொள்ளட்டும். அது அவர்கள் பிரச்சனை.

என் குடும்ப அமைப்பு சற்று சிக்கலானது. எனக்கு இரண்டு அண்ணன்மார்களும், ஒரு அக்காவும் உண்டு. அவர்களுக்குப் பல வருடங்களுக்கு முன்பே திருமணமாகிவிட்டது. சில மாதங்களுக்கு முன்புதான் எனக்குத் திருமணமாயிற்று. மீசை தாத்தா எனக்காக செய்த எண்ணற்ற உதவிகளின் சிகரம் ஜமுனாவைப் போன்ற ஒரு பெண்ணை எனக்குத் திருமணம் செய்து வைத்தது.

எனக்கு ஐந்து வயதாகும்போது, இருபது வருடங்களுக்கு முன்பு, என் அம்மாவிற்குத் தீவிர ஆன்மிக நாட்டம் உண்டாகி-விட்டது. மீசை தாத்தாவின் மொழியில் “கிறுக்கு பிடித்து விட்டது”. அம்மா இமயமலை பக்கமிருந்த ஆசிரமத்திற்குக் கிளம்பி விட்டார். அப்பாவிற்கு அம்மாமீது தீராக்காதல். அம்மாவோடு அவரும் போய்விட்டார். போகும்முன் குழந்தைகளான எங்கள் நான்கு பேரையும் மீசை தாத்தாவிடம் ஒப்படைத்து விட்டுப் போனார். சொத்துப் பிரச்சனை, பத்திரம், உயில் என்று எதைப்பற்றியும் அப்பா கவலைப்படவில்லை. ஏதாவது இருந்தால்தானே அதைப்பற்றிய கவலை உண்டாகும்?

ஆனால் மீசை தாத்தாவிடம் சில சொத்துக்கள் இருந்தன. எல்லாம் சுய சம்பாத்தியம். அப்பா, அம்மா எங்கோ சென்றபின், வேறு ஆதரவோ, வசதியோ இல்லாத தூரத்து உறவுப் பெண்ணை எங்களையும். வீட்டையும் கவனித்துக் கொள்ள நியமித்தார். அவரை கவர்னசத்தை என்று அழைத்தோம். அவர் வேலைக்காரி அல்ல. எங்கள் குடும்பத்தில் ஒருவர்.

மீசை தாத்தா இருக்கும்போது கவர்னசத்தை பிரியமாகப் பேசுவார். இல்லாதபோது சிடுசிடுப்பார். நாளாக, நாளாக தாத்தாவையும் எதிர்த்துப் பேச ஆரம்பித்தார். ஆனால், அதற்குள் நாங்கள் வளர்ந்து விட்டிருந்தோம். “பாவம், போக்கற்றவள். வேறு எங்கே போய் இயலாமையை வெளிப்படுத்த முடியும்!” என்று கூறி மீசை தாத்தா கவர்னசத்தையை இடைவிடாது மன்னித்துக் கொண்டேயிருந்தார்.

கவர்னசத்தையை மட்டுமல்ல. அவரால் எவரையும் மன்னிக்க முடியும். “நான் கடவுளையே மன்னித்தவனடா” என்று சொல்லிக் கொள்வார். அதைப்பற்றி எனக்குத் தெரியாது என்றாலும் அவருக்கு விசாலமான மனம் என்பது தெரியும்.

மீசை தாத்தா எங்கோ போகும்முன் “என் சொத்துக்களை நீங்கள் நான்கு பேரும் சுமுகமாக பிரித்துக் கொள்ளுங்கள். என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று ஜமுனாவிற்குத் தெரியும்” என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு, பல வெற்றுக் காகிதங்களிலும், வெற்றுப் பத்திரங்களிலும் கையெழுத்து போட்டு தந்து விட்டுப் போனார். தன் நம்பிக்கைக்குரிய நண்பர் வாசுதேவய்யா மூலம் அவற்றை ஜமுனாவிடம் ஒப்படைத்து விட்டுப் போனார். நேரில் பார்த்து சொல்லிக் கொண்டு போகக் கூடாது என்பதால் அப்படிச் செய்தார் என்று நினைத்தேன். நேரில் பார்த்தால் போக மனம் வராது என்பதால் அப்படிச் செய்தார் என்று ஜமுனா சொன்னாள்.

சித்தப்பாவிற்காகவும், அப்பாவிற்காகவும் மாதாமாதம் ரெகரிங் டெபாசிட்டில் ஒரு தொகையை மீசை தாத்தா சேமித்து வந்திருக்கிறார் என்பது போன்ற பல விஷயங்கள் அப்போதுதான் எனக்கும் ஜமுனாவிற்கும் தெரிய வந்தது.

“நேற்று வந்த ஜமுனா முக்கியமாகிவிட்டாளா? சின்னப் பெண் கையில் அதிகாரத்தைத் தருவது என்ன நியாயம்?” என்று

என் மூத்தவர்களுக்கு கோபம் வந்து எங்களோடு பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டார்கள். ஜமுனா என் மூத்தவர்களிடம் ரசீது வாங்கிக் கொண்டு மீசைத் தாத்தாவின் ஒரு சில தனிப்பட்ட ஆவணங்களைத் தவிர எல்லா பத்திரங்களையும், காகிதங்களையும் அவர்களிடமே கொடுத்துவிட்டாள். அதன்பின்தான் அவர்கள் மீண்டும் எங்களோடு பேச ஆரம்பித்தார்கள்.

## உ. மீசை தாத்தாவின் வரலாறு

இந்தியாவின் சுதந்திரத்திற்குமுன் எளிமையான விவசாயக் குடும்பத்தில் பிறந்த மீசை தாத்தா, பள்ளியில் படிக்கும்போது, தேசிய காங்கிரஸ் ஊர்வலத்தில் முன்னணியில் நின்று வந்தே மாதரம் கோஷம் போட்டு பிரிட்டிஷ் போலீசிடம் முக்கால் மணி நேரம் பிரம்படி வாங்கியிருக்கிறார்.

அடிக்கடி ஊர்வலத்தில் கலந்து கொண்டு, சுதந்திர இயக்கத்திற்காக தன் வயதுக்கு மீறிய வேலைகளை செய்ததால் "எதிர்காலத்து பயங்கரவாதி" என்று ஆங்கிலேய போலீஸ் ஆய்வாளரால் கோப்பில் சிவப்பு மையில் சிறப்புக் குறிப்பு தரப்பட்டு சில வாரங்கள் சிறுவர்கள் சீர்திருத்த மையத்தில் அடிவாங்கிக் கொண்டு இருந்திருக்கிறார். அப்படியும் திருந்தவில்லை. "நமக்கெதுக்கடா இந்த வம்பெல்லாம்?" என்ற பெரியவர்களின் அறிவுரைகளை அவர் பொருட்படுத்தியதே இல்லை.

பின்னாளில் சுதந்திரப் போராட்ட தியாகிக்கான மாத ஓய்வூதியம் தரப் போவதாக அவருக்கு பழுப்பு நிற உறையில் அரசாங்கக் கடிதம் வந்தபோது "இப்படிச் செய்தால் தேச பக்தி எப்படி வாழும்?" என்று கூறி அதை கிழித்தெறிந்துவிட்டார். ஆனால் ஒரே ஒருமுறைகூட தான் நாட்டிற்காகச் செய்தவற்றை இன்றுவரை எவரிடமும் சொல்லிப் பெருமைப்பட்டதில்லை.

ஜமுனா ஒருமுறை இதுபற்றிக் கேட்டபோது மீசை தாத்தா "நம் வீட்டு வேலையை நாம்தான் செய்ய வேண்டும். அதில்



சொல்லிக்காட்ட என்ன இருக்கிறது! மற்றவர்கள் நாட்டிற்காக என்னவெல்லாம் செய்தார்கள்! நான் செய்தது சிறுபிள்ளை விளையாட்டு" என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டார்.

கம்பெனியில் இருக்கும் அவருடைய அலமாரியை அடுக்கி வைக்கும்போது கதர் குல்லா ஒன்றையும், விவேகானந்தரின் படம் ஒன்றையும் பத்திரமாக மீசை தாத்தா வைத்திருப்பதை தான் பார்த்ததாக ஜமுனா என்னிடம் ரகசியமாகச் சொன்னாள்.

சுதந்திரம் வந்தபின், மீசை தாத்தா சென்னை பிரெசிடென்சி கல்லூரியில் படித்து பட்டம் வாங்கிக் கொண்டார். நாட்டைப் பற்றி பெரிய கனவுகள் வைத்திருந்தார். பல உண்மையான தேச பக்தர்களைப் போலவே சிறிது காலத்தில் ஆளுங்கட்சி மீது நம்பிக்கை இழந்து கம்யூனிஸ்டாக இருந்து பார்த்தார். அப்போது இந்திய போலீஸிடம் அடிபட்டார். தேசபக்தர் ஆங்கிலேயர்களிடம் அடி வாங்கினார். இந்தியர்களிடம் அதிகமாக அடி வாங்கினார். கம்யூனிசத்திலும் நம்பிக்கை இழந்தபின் எந்த இயக்கத்தோடும் தன்னை தீவிரமாகப் பிணைத்துக் கொள்ளவில்லை.

பிரிவினை பேசிய கட்சிகளை ஆரம்பம் முதலே அவருக்கு பிடிக்கவில்லை. "விரலில் வீக்கம் வந்தால் கையை வெட்டச் சொல்லும் வீணர்கள்" என்பார். பிரிவினை பேசிய தலைவர்களின் மேடைப் பேச்சை நாடே வியந்து பாராட்டியபோது, அதை மீசை தாத்தா கடுமையாக விமரிசனம் செய்தார்.

"இந்தியாவின் மீது அக்கறை இல்லாத நம் நாட்டு அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்தால் மற்ற தேசத்து அரசியல்வாதிகளைப் போல வழிப்பறி கொள்ளை அடிக்கமாட்டார்கள். வழியையே கொள்ளை அடித்து விடுவார்கள்" என்று மீசை தாத்தா கூறியது பிற்காலத்தில் அப்படியே நடந்தது.

அரசியலில் ஆர்வம் இழந்தபின் திருக்குறள், திருவாசகம், வள்ளலார் என்று தன் வாழ்க்கையை மீசை தாத்தா சுருக்கிக் கொண்டார் அல்லது விரிவாக்கிக் கொண்டார். கூடவே பெரிய மீசையும் வளர்த்துக் கொண்டார். மீசை தாத்தா என்ற பெயர் பிற்காலத்தில், அவருக்கு அறுபது வயதாகும்போது, என்னால் அளிக்கப்பட்டது.

கம்யூனிசத்தை காதலித்தபோது மீசை தாத்தா சில வாரங்கள் தலை மறைவு வாழ்க்கை நடத்தினார். அப்போது நண்பர் ஒருவர் தாத்தாவை தன் வயல் குடிசையில் ஒளித்து வைத்து, ரகசியமாக கூழூற்றிக் காப்பாற்றினார். பின் தாத்தா போலீசில் பிடிபட்டு, அடிபட்டு இயக்கத்தை விட்டு விலகியபின், நண்பர் தன் தங்கையை மீசை தாத்தா திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அப்படித்தான் பாட்டியோடு திருமணமாயிற்று. அப்போது மீசைத் தாத்தாவிற்கு இருபத்தி மூன்று வயது. “பெரிய மீசை பயமாக இருக்கிறது. நான் இவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்” என்று பாட்டி பயந்து மூன்று நாட்கள் சாப்பிடாமல் இருந்தபோது “என்னோடு பழகிப் பார். மீசை பிடிக்கவில்லை என்றால் எடுத்து விடுகிறேன்” என்று மீசை தாத்தா சத்தியம் செய்தபின்தான் பாட்டி சந்தோஷமாக தாலி கட்டிக் கொண்டார். சில நாட்களுக்குப்பின் பாட்டி “ஆண்பிள்ளைக்கு மீசைதான் அழகு” என்று பேச ஆரம்பித்து விட்டார். பாட்டி அப்படிச் சொல்லும்போதெல்லாம் புன்னகை-யோடு தாத்தா மீசையை நீவி விட்டுக் கொள்வார் என்று பாட்டி சொன்னதுண்டு. அது உண்மையா என்று எனக்குத் தெரியாது.

கல்யாணமான அடுத்த வருடமே என் அப்பாவும், அதன்பின் நான்கு வருடங்கள் கழித்து சித்தப்பாவும் பிறந்தனர்.

மீசை தாத்தா மாதச் சம்பள வேலைக்குப் போனதே இல்லை. “நாடு முன்னேற வேண்டுமானால் சொந்தமாக தொழில் செய்ய வேண்டும், அடுத்தவரிடம் வேலை செய்யக் கூடாது” என்று தாத்தா எல்லோரிடமும் சொல்வாராம். எவரும் இவர் பேச்சைக் கேட்டதில்லை.

“அதை நீ முதலில் செய்” என்று சிலர் கேலியாகச் சொல்ல மீசை தாத்தா தன்னிடமிருந்த சொற்ப விவசாய நிலத்தையும், அதை ஒட்டிய, குடும்பம் குடியிருந்த வீட்டையும் விற்றபோது, பாட்டியின் அண்ணார் ஊர்ப் பெரிய மனிதர்களைக் கூட்டிக் கொண்டு நியாயம் கேட்க வந்தார். வீதியில் நின்று கூச்சல் போட்டு மீசை தாத்தாவை அவமரியாதையாகப் பேசினார்.



“உன்னை நம்பியா பெண் கொடுத்தோம்? நிலத்தையும், வீட்டையும் நம்பித்தானே பெண் கொடுத்தோம். பொறுப்-பில்லாமல் எங்கள் வீட்டு மகாராணியை நடுத்தெருவில் நிறுத்திவிட்டாயே” என்று ஓலமிட்டார். அதை மீசை தாத்தா பொருட்படுத்தவில்லை.

ஆனால் ‘மீசை வைத்தால் மட்டும் ஆண்பிள்ளை ஆகிவிட முடியாது. எனக்கும், என் பிள்ளைகளுக்கும் வீடு வேண்டும். அண்ணார் எனக்காக நியாயம் கேட்கிறார். பதில் சொல்லுங்கள்’ என்று கூறி எல்லோர் முன்பும் உருண்டு புரண்டு பாட்டி அழுதது மீசை தாத்தாவின் மனதை ஆழத்தில் புண்படுத்தியது.

வீடும், நிலமும் கைமாறியதால் “பாதுகாப்பு போயிற்றே” என்று மூன்று நாட்கள் ஒருவேளையும் சாப்பிடாமல் அழுத பாட்டி, மீசை தாத்தா புதிய நிலமும் வீடுகளும் வாங்கப் போகிறார் என்பது தெரிந்ததும் சிரித்துக் கொண்டே அடுத்த மூன்று நாட்களும் தினம் ஆறுவேளை சாப்பிட்டார்.

விவசாய நிலத்தை விற்று வந்த பணத்தில் மீசை தாத்தா சூளைமேட்டில் ஒரு கிரவுண்டு நிலத்தை சமஸ்கிருத பண்டிதரிடமிருந்து வாங்கினார். அந்த நிலத்தின்மேல் அருகருகே இருந்த பழையகாலத்து ஓடுவேய்ந்த சிறிய வீடுகள் இரண்டும் நிலத்தோடு கிடைத்தன. அப்போது அவருக்கு வயது இருபத்தி ஏழு. ஒரு வீட்டில் தான் குடியேறினார். மற்றொரு வீட்டை தன் கம்பெனி அலுவலகம் என்றார். பெயரிடப்படாத தன் கம்பெனி என்ன செய்யப் போகிறது என்பது அதை ஆரம்பிக்கும்போது அவருக்கேத் தெரியாது.

சில நண்பர்கள் “புத்தகம் விற்றால் நல்ல லாபம் வரும்” என்றனர். அதைத் தவறாகப் புரிந்து கொண்ட மீசை தாத்தா அறம், ஆன்மிகம், பண்பாடு, கலை பற்றிய அறிவார்ந்த புத்தகங்கள் போட ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார். இதைக் கேள்விப்பட்ட பாட்டி “இவருக்கு புத்தி இப்படி கெட்டுப் போக வேண்டுமா! எடுக்க எடுக்க நெல் வரும் நிலத்தை விற்று-விட்டு, ஒரு தடவை கூட விற்க முடியாத புத்தகத்தில் என்ன சம்பாதிக்கப் போகிறார்!” என்று கேலி செய்ய, மீசை தாத்தா

சிந்தனைவயப்பட்டு விட்டார். "சினிமா, ஜோதிடம், மர்மம் பற்றி புத்தகம் போட்டால் நம் மக்கள் பணம் கொடுத்து திரும்பத் திரும்ப வாங்குவார்கள். காமக்கதை புத்தகம் விற்பவனை மக்கள் குறுகிய காலத்தில் குபேரனாக்கி விடுவார்கள். நூலகங்களில் புத்தகம் வாங்குவது கணக்கு காட்டத்தான். மனிதன் மாறாதவரை அறிவார்ந்த புத்தகங்களை கரையான்கள் மட்டுமே வாசிக்கும்" என்பதைப் புரிந்து கொண்டார்.

எடுக்க எடுக்க நெல் வர வேண்டும். மீண்டும் மீண்டும் எதை விற்க முடியும்? செலவாகும் அல்லது உடையக் கூடிய பொருளைத்தான் அப்படி விற்க முடியும். மீசைத் தாத்தாவின் கொள்கையின்படி அது அறிவை வளர்க்கும் பொருளாகவும் இருக்க வேண்டும். "எதை வேண்டுமானாலும் விற்க நான் வெறும் வியாபாரி அல்ல" என்று ஒருமுறை சொன்னார். அப்படிப்பட்ட பொருளைத் தேடிக் கொண்டிருந்தபோது சிறு குழந்தையாக இருந்த என் அப்பா கண்ணாடி தம்ளர் ஒன்றை கீழே போட்டு உடைத்து விட்டார். அவர் முதுகில் இரண்டு அடி போட்ட பாட்டி "உங்கள் பிரிய மகன் இந்த மாதம் மட்டும் மூன்று கண்ணாடி தம்ளர்களை உடைத்திருக்கிறான். எத்தனை தம்ளர்கள்தான் வாங்குவது!" என்று தாத்தாவிடம் புகார் செய்தார்.

அதைக் கேட்ட மீசை தாத்தாவிற்குக் கோபம் வரவில்லை. திட்டம் வந்தது. "பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள ஆய்வுக் கூடங்களுக்கான ரசாயனப் பொருட்களையும், கண்ணாடிக் குடுவைகள், குழாய்கள், பியூரட், பிப்பெட் போன்ற பொருட்களையும் விற்றால் என்ன?" என்று தோன்றியது. மீசை தாத்தாவோடு படித்த பலர் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களாக இருந்தனர். அவரது நண்பர்கள் சிலர் கல்வித் துறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். "பொருள் தரமாக இருந்தால் வாங்குவதில் எங்களுக்கு ஒரு தயக்கமும் இல்லை" என்றனர்.

அப்படித்தான் "பாரதம் லாப்ஸ்" ஆரம்பமாயிற்று. முதலாளி, தொழிலாளி, காவலாளி, கணக்காளி எல்லாம் மீசை தாத்தாதான். திருநின்றவூர் பூசலார் மனக்கோவில் கட்டும்போது கையில் பணமில்லை. அதனால் கல்லுடைக்கும் கலையிலிருந்து,



சிற்பம் செதுக்கும் கலைவரை எல்லாவற்றையும் அவரே முறைப்படி கற்றுக் கொண்டு மனதில் செய்தாராம். மீசை தாத்தாவும் கிட்டத்தட்ட அப்படித்தான் செயல்பட்டார். உலையில் ஊதி கண்ணாடி குடுவை உருவாக்கும் முறை முதற்கொண்டு கழிப்பறை கழுவும் கலைவரை எல்லாவற்றையும் தாத்தா கற்றுக் கொண்டார். எப்போது என்ன சாப்பிடுவார், எங்கே எப்படி தூங்குவார் என்பதெல்லாம் எவருக்கும் தெரியாது. அவருக்கே தெரியாது. உயிர் வாழ ஒரு கப் காபி, ஆறடி நீள தரை போதும் அவருக்கு. அந்த காலத்தில் டீ பிரபலம் இல்லை என்பதால் காபி விரும்பிக் குடிப்பார். "மனுஷர் குடம், குடமாக காபி குடிப்பார். கொட்டை அரைத்து கையே தேய்ந்து விட்டது" என்று பாட்டி சலித்துக் கொள்வாராம். கிராமங்களுக்குப் போக நேர்ந்தால் பனையோலை கிண்ணத்தில் பதநீர் பருகுவார்.

எவரையும் அவர் சார்ந்திருக்கவில்லை. தேய்பிறையில் கம்பெனியில் உட்கார்ந்து பொருள் செய்தார். செய்த பொருளை வளர்பிறையில் தென்னிந்தியா முழுவதும் சுற்றி விற்றார். மூன்றே வருடங்களுக்குள் கம்பெனி வளர்ந்துவிட்டது.

எங்கள் கம்பெனி பொருளின் தரத்தைப் பார்த்த ஒரு பிரெஞ்சுக் கம்பெனி தன் யந்திரங்களுக்குத் தேவையான கண்ணாடி பாகங்களைத் தயாரிக்கும் வேலையைத் தந்தது. சில காலம் கழித்து "எங்கள் ஆராய்ச்சிக்கூட யந்திரங்களை நீங்கள்தான் இந்தியாவில் விற்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டது. நூறு ரூபாய்க்கும், இருநூறு ரூபாய்க்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடமாகச் சென்று கண்ணாடிக் குடுவைகள் விற்றுக் கொண்டிருந்த மீசை தாத்தா டாடா கெமிக்கல்ஸ், ரிலையன்ஸ் போன்ற பெரிய நிறுவனங்களுக்குச் சென்று ஒரு லட்சத்திற்கும், இரண்டு லட்சத்திற்கும் விற்கத் தொடங்கினார். விற்கும் அலைச்சல் வெகுவாகக் குறைந்தது. விற்றதற்கான பணத்தை வசூல் செய்யும் அலைச்சல் அதைவிட அதிகமாகக் குறைந்தது. நூறு பள்ளிக்கூடங்களுக்குப் போய் விற்றால் வரும் தொகை ஒரே ஒரு யந்திரத்தை டாடா கம்பனிக்கு விற்பதில் கிடைத்தது.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மீசை தாத்தா கட்டிய புதிய தொழிற்சாலையில் நாற்பது பேர் யந்திரங்களில் வேலை பார்த்தனர். சூளைமேடு அலுவலகத்தில் இருபது பேர் நெருக்கி உட்கார்ந்து வேலை பார்த்தனர். அறுபது குடும்பங்கள் நன்றாக வாழ்ந்தன.

மீசை தாத்தா தியாகராய நகர் போக் சாலையில் இரண்டு கிரவுண்டுகளும், நுங்கம்பாக்கம் கல்லூரிச் சாலையில் இரண்டு கிரவுண்டுகளும், அண்ணாமலைபுரம் ராமசாமி சாலையில் இரண்டு கிரவுண்டுகளும் வாங்கினார். தன் முப்பது வயதிற்குள் சொற்பத் தொகைக்கு அவற்றை வாங்கி விட்டிருந்தார். நிலம் வாங்க அந்தக் காலத்தில் நாட்டில் பெரிய போட்டி இருக்க-வில்லை. அன்று காடு போலிருந்தவை இன்று கனவான்களும், தனவான்களும் வசிக்கப் போட்டி போடும் பகுதிகள்.

பெரிய இடமாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று மீசை தாத்தா நினைத்தபோது, அவசரத் தேவை என்று கெஞ்சிய நெருங்கிய நண்பர் வாசுதேவய்யாவின் கனபாக்கத்தில் இருந்த பத்து ஏக்கர் நிலத்தை, பார்க்காமல், விசாரிக்காமல் அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். அன்று அது காடு போலில்லை. காடேதான்.

அந்த நிலத்தை வாங்கிப் பல மாதங்கள் கழிந்த பின்புதான், அது மயானத்தால் சூழப்பட்ட, போக வர பாதை இல்லாத, விற்பதை கற்பனை செய்யவும் முடியாத நிலம் என்பதையும், சொந்தமாகச் சமாதி கட்டிக் கொள்ள மட்டும் ஏற்ற இடம் என்பதையும் தெரிந்து கொண்டார். ஆனாலும் நட்பை முறித்துக் கொள்ளவில்லை. “அவன் விற்பவன். குறைகளைச் சொல்ல-மாட்டான். வாங்கிய நான்தான் விசாரித்திருக்க வேண்டும்” என்று சொல்லிவிட்டார்.

வியாபாரத்தை அவர் ஓரளவிற்கு மேல் விரிவுபடுத்தவில்லை. வருடாவருடம் வந்த பணத்தைச் சேர்த்து வைத்து முப்பது வருடங்களுக்குள் மூன்று வீடுகள் கட்டினார். வீடுகள் என்றா சொன்னேன்? அவை பங்களாக்கள்.



முதலில் கட்டிய தியாகராய நகர் பங்களாவில் குடியேறினார். மற்ற இரண்டு பங்களாக்களையும் பூட்டி வைத்திருந்தார். “வாடகைக்கு விட்டால் வருமானம் வருமே” என்று நண்பர்கள் சொன்னபோது மறுத்துவிட்டார். “குடியிருக்க வருபவன் எப்படிப்பட்டவன் என்பது தெரியாது. என் பிள்ளைகள் வாழப்போகும் வீடுகள் சுத்தமாக இருக்கட்டும்” என்று கூறிவிட்டார்.

ஆனால் அவர் பிள்ளைகள் அந்த வீடுகளில் வாழவில்லை. சித்தப்பா மட்டும் தன் வைப்பாட்டிகளுடன் சில நாட்கள் ஆக்கிரமிப்பு செய்து பின் நீதிமன்றத்தால் வெளியேற்றப்பட்டார்.

## 3. மீசை தாத்தாவின் பிள்ளைகள்

மீசை தாத்தாவிற்கு இரண்டு ஆண்பிள்ளைகள். இருவருமே தங்கள் வாழ்நாளில் ஒரே ஒரு ரூபாய் கூட சம்பாதித்ததில்லை. அவர்களுக்காக இதுவரை தாத்தாதான் சம்பாதித்து வந்திருக்கிறார். அவர் பிள்ளைகள் எந்தக் கூச்சமும் இல்லாமல் செலவு செய்து வந்திருக்கிறார்கள்.

என் அப்பா மூத்தவர். ஆங்கில இலக்கியத்தில் பட்டம் வாங்கினார். கவிதை எழுதுவார். காவியம் வாசிப்பார். வேறு வகையாகச் சொல்வதென்றால் சம்பாதிக்கும் திறனற்றவராக இருந்தார். சம்பாதிக்கவில்லை என்பதால் காதல் வராமலா இருக்கிறது? உறவுப் பெண்ணான என் அம்மாவைத் தன் இருபதாவது வயதில் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டார். “கல்யாணத்திற்கு என்ன அவசரம்? இன்னும் சில வருடங்கள் போகட்டுமே” என்று மீசை தாத்தா சொன்னபோது அப்பா “கல்யாணம் பண்ணி வைக்காவிட்டால் நான் வீட்டை விட்டு வெளியே போய் விடுவேன்” என்று மிரட்டினார். “எங்கோ ஒழிந்து போகட்டும், இனி தண்டச் செலவு இருக்காது” என்றார் மீசை தாத்தா. பிள்ளைக்கு ஆதரவாக பாட்டி மூன்று நாட்கள் சாப்பிடாமல் இருந்தார். தாத்தா கல்யாணத்திற்குச்

சம்மதித்த பிறகுதான் பாட்டி சந்தோஷமாகி மீண்டும் சாப்பிடத் தொடங்கினார்.

அம்மாவிற்கு கிருஷ்ணப் பிரேமை. மனதிற்குள் ராதாராணி என்று நினைப்பு. அம்மா கிருஷ்ண பக்தையாக இருந்ததால் அப்பாவும் கிருஷ்ண பக்தரானார். என் அப்பாவிற்கு அம்மாதான் குடும்பதெய்வம், குலதெய்வம், இஷ்டதெய்வம் எல்லாமே. அம்மா, அப்பா இருவரும் தினமும் ஏதாவது பூஜை செய்து பக்தர்களுக்கு அன்னதானம் செய்தனர். அதை “ஆணவதானம்” என்று மீசை தாத்தா சொல்வார். பாலும், நெய்யும், வழிந்தோடும். கல்யாண விருந்து தினமும் கிடைக்கும் என்பதால் அந்தப் பகுதியில் ஏராளமானவர்களுக்கு கிருஷ்ண பக்தி வந்துவிட்டது. தங்கள் பக்தி மற்றவர்களை ஈர்க்கிறது என்று அம்மாவும், அப்பாவும் நம்பினர். பூஜை மட்டுமே செய்து கொண்டிருக்காமல், என் பெற்றோர்கள் அவ்வப்போது காமத்திலும் கவனம் செலுத்தியதில் நாங்கள் நால்வரும் பிறந்தோம். தாத்தாவிற்கு நாற்பத்தைந்தோ, நாற்பத்தியாறோ ஆகும்போது புருஷண்ணார் பிறந்து விட்டார். “உன் அப்பாவின் பிடிவாதத்தால் வாலிபனாக இருக்கும்போதே தாத்தாவாகி விட்டேன்” என்று மீசை தாத்தா சொல்வதுண்டு.

என் சித்தப்பாவிற்குப் பட்டப் படிப்பை முடிக்கும்முன்பே குலுக்கி நடக்கும் குமரிகள் மீதும், துள்ளியோடும் குதிரைகள் மீதும், தள்ளாட வைக்கும் குடியின் மீதும் பிடிப்பு வந்து விட்டது. இந்த மூன்றில் ஒன்றின்மீது ஆசை வந்தாலே குடும்பம் திவாலாவதைத் தடுக்க முடியாது. அவர் மூன்றையும் ஒரே-சமயத்தில் தழுவினார். காலையில் தயாராகி வாடகைக் காரில் கோடம்பாக்கத்திற்குப் போனால் கணிசமான தொகைக்குப் புத்தம்புதிய பெண் கிடைப்பாள். அந்தச் சந்தோஷத்தைக் கொண்டாட அவளையும் அழைத்துக் கொண்டு மதியம் கிண்டி போய் குதிரை பந்தயத்தில் பெரிய தொகையை இழப்பார். அந்த துக்கத்தை மறக்க மாலையில் மவுண்ட் ரோடில் இருக்கும் கனவான்களின் கிளப்பில் மேல்நாட்டு மது அருந்தி மீதியிருக்கும் தொகையை செலவழிப்பார். நண்பர்களிடம் கடன் வாங்கி வாடகைக் காரில் வீடு திரும்புவார்.



தினமும் புது மாப்பிள்ளையாக சாந்தி கல்யாணம் நடத்தி வந்ததால் சித்தப்பா திருமணம் செய்து கொள்ளவில்லை. அவர் நண்பர் “கல்யாணம் செய்து கொண்டால் செலவு குறையும்” என்று சொன்னதற்கு “அட போய்யா! கல்யாணம் செய்து கொண்டால் இத்தனை தினுசு கிடைக்குமா! வாழ்நாளெல்லாம் ஒரே பெண்ணா! நரகமையா நரகம்” என்று சித்தப்பா பதில் சொன்னாராம்.

மீசை தாத்தா டிபன் பாக்ஸில் தயிர் சாதம் எடுத்துக் கொண்டு, எவரும் எழுந்திருக்கும்முன் அதிகாலையில் சைக்கிளில் கம்பெனிக்குச் சென்று விடுவார். எல்லோரும் தூங்கியபின் நள்ளிரவில் சைக்கிளில் டைனமோ விளக்கு வெளிச்சத்தில் வீடு திரும்புவார். வெய்யில் காலத்தில் வியர்வையில் நனைவார். மாரிக்காலத்தில் மழைநீரில் நனைவார். “கார் வாங்கிக் கொள்ளுங்களேன்” என்று ஆடிட்டர் சொன்னபோது “சைக்கிள் மிதிப்பது உடம்புக்கு நல்லது” என்று சொல்லிவிட்டார். அதற்காக அவசியமானபோதுகூட செலவு செய்யமாட்டார் என்று அர்த்தமில்லை.

மீசை தாத்தாவிற்கு நன்கு தெரிந்த, அவர் பெரிதும் மதித்த ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகியை சுதந்திர தின விழாவிற்காக கட்சி ஒன்று அழைத்திருந்தது. அவர் வட இந்தியாவிலிருந்து சொந்த செலவில் சென்னை வந்தார். அவர் தன்னூரிலிருந்து கிளம்பி சென்னைக்கு ரயிலில் வந்து சேரும்முன் கட்சி வேறு கூட்டணிக்கு மாறிவிட்டது. ரயில் நிலையத்தில் தனியாக ஒரு மணி நேரம் நின்று கொண்டிருந்த தியாகி, கையில் பணமில்லாமல் யார் யாரையோ விசாரித்து பஸ் பிடித்து எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

அவரைச் சிறிது ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு வெளியே போன மீசை தாத்தா இரண்டு மணி நேரத்தில் பதிவு எண் கூட வாங்கப்படாத புதிய காரோடும், டிரைவரோடும் திரும்பி வந்தார். அந்தக் காரில்தான் தியாகி சென்னையையும், தமிழ்நாட்டையும் சுற்றிப் பார்த்தார். தியாகி தன்னூருக்குத் திரும்பும் நாள் வந்தபோது, “புதிய காரை உங்களுக்காகத்தான்

வாங்கினேன். எனது அன்பளிப்பாக பெரிய மனது பண்ணி ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று தாத்தா கேட்டுக் கொண்டார். "இது வாடகைக் கார் என்று நினைத்தேன். ஊருக்குச் சென்றதும் வாடகைப் பணத்தை உனக்கு அனுப்பி விடலாம் என்று நினைத்தேன். இப்படிச் செய்து விட்டாயே" என்று வருந்திய தியாகி, "நீ என் நிலையிலிருந்தால் காரை வாங்கிக் கொள்வாயா?" என்று கேட்டார். "மாட்டேன்" என்றார் தாத்தா. "நானும் வாங்க மாட்டேன்" என்று கூறிவிட்டார் தியாகி. பின் தாத்தா படாத பாடு பட்டு, கெஞ்சி, தன் செலவில் விமானத்தில் போக தியாகியை சம்மதிக்க வைத்தார். தியாகி போனபின், காரை கம்பெனி உபயோகத்திற்குத் தந்து விட்டார். மழைக் காலங்களில் வேலைக்காரியையும், பியூனையும் அவர்கள் குடிசைக்குச் சென்று கார் கூட்டி வந்து கொண்டிருந்தது. போன வருடம் அந்தக் கார் தாத்தாவிற்குத் தெரியாமல் விற்கப்பட்டுவிட்டது.

பிள்ளைகள் நடந்து கொள்ளும் விதத்தைப்பற்றி பாட்டி மீசை தாத்தாவிடம் சொல்லவே இல்லை. கண்ணாடி தம்ளர் உடைந்ததைப் புகார் செய்தவர், குடும்பம் திவாலாகிக் கொண்டிருப்பதை மறைத்துவிட்டார்.

மீசை தாத்தா தினமும் ஒரு பெரிய தொகையைப் பாட்டியிடம் கொடுத்து வைப்பார். அது அன்றன்றே அழிந்துவிடுகிறது என்பது அவருக்குத் தெரியாது.

ஒரு நல்ல நாளன்று "அடையாரில் இரண்டு கிரவுண்டு வாங்க ஏற்பாடு செய்திருக்கிறேன். உன்னிடம் இதுநாள்வரை கொடுத்த இத்தனை லட்சத்தை எடுத்து வா" என்று பாட்டியிடம் சொன்னபோதுதான் வீட்டு நிலவரம் அவருக்குத் தெரிய வந்தது. பாட்டியைக் கோபித்துக் கொள்ளவில்லை. ஒரு கடுமையான வார்த்தைகூட கூறவில்லை. "சரி விடு. இனி கவனமாக இருப்போம்" என்று மட்டுமே சொன்னார். அதில் பாட்டிக்குத் தாள முடியாத வருத்தம்.

"என்னை ஒரு வார்த்தைகூட திட்டவில்லையே. என்மீது இவருக்குப் பிரியமோ, அக்கறையோ இல்லை" என்று மூன்று



நாட்கள் ஒரு வேளையும் சாப்பிடாமல் பாட்டி அழுதார். நான்காவது நாள் மீசை தாத்தா "இது என்ன அர்த்தமில்லாத ஆர்ப்பாட்டம்? ஒழுங்காக சாப்பிடுகிறாயா இல்லையா?" என்று கடுமையாகப் பேசியபின் சிரித்துக் கொண்டே அடுத்த மூன்று நாட்களும் தினம் ஆறுவேளை சாப்பிட்டார்.

அதற்குப் பின் மீசை தாத்தா வீட்டுச் செலவு பட்டியல் போட்டார். "மாதச் செலவு இதற்கு மேல் ஆகக் கூடாது" என்று கூறி, ஒரு தொகையை மட்டும் பாட்டியிடம் தந்தார். வேறு எந்தப் பணத்தையும் வீட்டிற்குக் கொண்டு வருவதை நிறுத்தினார். "நம் குடும்பத்தின் ஆதாரம் அன்பில்லை, பணம்தான்" என்பதை பாட்டிக்குப் பிள்ளைகள் புரிய வைத்தனர்.

என் அப்பாவிற்கு மீசை தாத்தாமீது வருத்தம் எதுவுமில்லை. பூஜைக்கு வரும் பக்தர்களிடம் வட்டிக்குக் கடன் வாங்கி பூஜை நடத்தினார். மேற்கொண்டு கடன் வாங்க முடியாதபோது கிருஷ்ணர் சோதிக்கிறார் என்று நினைத்தார். பணம் வருவதற்கென பல வகையான பரிகாரங்கள் செய்யத் தொடங்கினார். அவரது முயற்சி வீணாகவில்லை. சித்தப்பா, பாட்டியின் நகைகளை எடுத்து விற்க ஆரம்பித்து, அதில் ஒரு சிறு பங்கை அப்பாவிற்கும் தந்தார். "நான் ஆரம்பித்திருக்கும் புதிய வியாபாரத்தில் வருமானம் வருகிறது" என்றார் சித்தப்பா. தன் கைக்கு அவ்வப்போது பணம் வந்ததால் சித்தப்பா சொன்னதை அப்பா கேள்வி கேட்காமல் நம்பினார். அந்தப் பணத்தை வைத்து அப்பா பூஜைகள் தொடர்ந்து செய்தார். பாட்டி எதுவும் தெரியாதது போல பாவனை செய்து கொண்டிருந்தார்.

நகைகள் தீர்ந்ததும், தன் புதிய வியாபாரத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று சித்தப்பாவிற்குத் தோன்றியது. மூன்று பங்களாக்களின் பத்திரங்களையும் எடுத்துச் சென்று, கள்ளக் கையெழுத்து போட்டு கணிசமான தொகைக்கு அடகு வைத்தார். திருப்ப வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லாததால் எவ்வளவு வட்டி, எத்தனை தவணை என்பன போன்ற அற்ப விஷயங்களைப்பற்றி கேட்டுத் தெரிந்து

கொள்ளவில்லை. வந்த பணத்தில் வழக்கம் போல ஒரு பங்கை என் அப்பாவிற்கும் தந்தார். சூளைமேட்டிலிருந்த எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய பழைய வீடுகளின்மேல் எவரும் கடன் கொடுக்கவில்லை.

அந்தப் பணமும் தீர்ந்தபின், பத்திரங்களை நகலெடுத்து, அவற்றை அரசியல்வாதிகளின் அடியாட்களிடம் அடகு வைத்து கடன் வாங்கினார். ஒரே சொத்தின் மீது வெவ்வேறு நபர்களிடம் நான்கைந்து முறை கடன் வாங்கினார்.

வட்டி வரவில்லை என்றதும் கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கு வந்தனர். பாட்டிக்கும், அப்பாவிற்கும் அப்போதுதான் நிலைமை புரியத் தொடங்கியது. சித்தப்பா மாடி அறையில் ஒளிந்து கொண்டு “வீட்டில் இல்லை, ஊரில் இல்லை” என்று சொல்லச் சொன்னார். ஆரம்பத்தில் பணிவுடன் பேசிய கடன்காரர்கள் நாளாக, நாளாக வீட்டுப் பெண்களின் ஒழுக்கம் பற்றியும், கற்பு பற்றியும் பற்பல சந்தேகங்கள் எழுப்பி ஏகவசனத்தில் பேசத் தொடங்கினர். பயந்து போன பாட்டி மீசைத் தாத்தாவிடம் விஷயத்தைச் சொன்னார். எல்லா விவரங்களையும் கேட்டபின் தாத்தா சிரித்தார்.

மறுநாள் மீசை தாத்தா அம்பத்தூரிலிருந்த தன் தொழிற்சாலையை விற்றார். எல்லாக் கடன்களையும் வட்டியோடு திருப்பிக் கட்டி பத்திரங்களை மீட்டார். கள்ளப் பத்திரங்களை கிழித்தெறிந்தார். கங்கையை விற்றவர், கங்கோத்ரியை விற்கவில்லை. கங்கோத்ரி இருந்தால் பல புதிய கங்கைகளை உற்பத்தி செய்ய முடியுமென நினைத்தார் போலிருக்கிறது. தொழிற்சாலையை விற்றவர் சூளைமேடு கம்பெனியை மூடவில்லை. சிறிய அளவில் ஆரம்ப நிலையில் செய்தது போல தொழிலைத் தொடர்ந்து நடத்தினார்.

பாட்டியையும், அம்மாவையும் மிரட்டிய போக்கிரிகளின் இடங்களுக்கு மீசை தாத்தா தனியாளாக சைக்கிளில் சென்றார். ஒவ்வொரு கேடியையும் அவனது வீட்டிலேயே பார்த்து மீசையை நீவியபடி “என் பக்கம் தவறு இருப்பதால், இந்த முறை உன்னை மன்னிக்கிறேன். இன்னொரு முறை என்னிடம்



பெருந்தன்மையை எதிர்பார்க்காதே” என்றார். வெலவெலத்துப் போன போக்கிரிகள் தாத்தாவிடம் மன்னிப்புக் கேட்டனர். சித்தப்பா மீண்டும் கடன் கேட்க போன போது “கடன் தருகிறோம். ஆனால் சொத்து உன் பெயரில் இருக்க வேண்டும். உன் தகப்பனார் சம்பந்தப்படக் கூடாது” என்றனர்.

கடன் வாங்க முடியாத நிலையில் என் அம்மாவின், தன் அண்ணியின், வைர நகைகளை எடுத்துக் கொண்டு சித்தப்பா வீட்டை விட்டு வெளியேறினார். அன்றாடம் ஒரு புதுப் பெண்ணுக்குப் பணம் கொடுத்து கட்டுப்படியாகவில்லை என்பதால், நல்ல குடும்பத்தில் பிறந்து, சென்னைக்கு ஓடி வந்து, சினிமா வாய்ப்பு தேடி, கிடைக்காமல் சீரழிந்துபோன ஆந்திரா பெண்ணையும், கேரளா பெண்ணையும் தமிழரான சித்தப்பா நிரந்தரமாக வைத்துக் கொண்டார். என்ன இருந்தாலும் தேச ஒருமைப்பாட்டை உயிராக நினைப்பவரின் பிள்ளை அல்லவா?

இரண்டு பெண்களின் தூண்டுதலாலும், “தோற்க வாய்ப்பே இல்லாத வழக்கு, உன் அப்பாவைத் துண்டு துண்டாக கிழித்து விடலாம்” என்று வக்கீல் உற்சாகமூட்டியதாலும், “எந்தச் சொத்தும் என் தகப்பனாரின் சுய சம்பாத்தியம் இல்லை. எல்லாமே பூர்வீக சொத்தை விற்று ஆரம்பித்த வியாபாரத்தில் வந்தவை. அவற்றில் எனக்கு உரிமை உண்டு. பங்கு பிரிக்க வேண்டும்” என்று மீசை தாத்தா மீது சித்தப்பா வழக்குப் போட்டார். “விவரமில்லாத சின்னப் பிள்ளை. மன்னித்து விடுங்கள்” என்றார் பாட்டி. “ஒரு ரூபாய்கூடத் தரமுடியாது” என்று பதில் தந்தார் மீசைத் தாத்தா.

“நீங்கள் பற்றற்றவர். உடனே எல்லாவற்றையும் கொடுத்திருப்பீர்கள் என்று நினைத்தேன். நீங்களா அப்படிச் சொன்னீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறது” என்று நான் கேட்டபோது மீசை தாத்தா “பெரியவனுக்கு மனைவியும், குழந்தைகளும் உண்டு. சின்னவனுக்கு ஒருவரும் இல்லை. அவன் எதிர்காலம் நன்றாக இருக்கவேண்டும் என்பதனால்தான் எதுவும் தர மறுத்தேன். பணத்தின்மேல் பற்றில்லைதான்.

பிள்ளைகள் மீதிருக்கிறதே” என்றார். பின் சிரித்துக் கொண்டே “அவன் திருந்தியபின் கேட்டதெல்லாம் தரலாம் என்று நினைத்தேன். பிள்ளை அப்பாவி, கூடிய சீக்கிரம் திருந்தி விடுவான் என்ற மூட நம்பிக்கை இல்லாத தகப்பன் உலகில் உண்டா?” என்று தன்னைத்தானே கேலி செய்து கொண்டார்.

“சொத்து எவர் கையில் இருக்கிறதோ, எவர் அனுபவிக்கிறாரோ, அவருக்குச் சாதகமாக சட்டம் பேசும். அதனால் ஆந்திராக்காரியை நுங்கம்பாக்கம் பங்களாவிலும், கேரளாக்காரியை அண்ணாமலைபுர பங்களாவிலும் குடி வைத்துவிடு” என்று வக்கீல் சித்தப்பாவிற்கு ஆலோசனை தந்தார். “குடிகார சூதாடியின் கையில் சொத்து வந்ததும், சில்லறையை வீசி எறிந்துவிட்டு சொத்தை எடுத்துக் கொள்ளலாம்” என்று வக்கீல் நினைத்திருப்பார். அவர் சொன்னதை சித்தப்பா உடனே செயல்படுத்தினார். சித்தப்பாவின் வக்கீல் பல பொய்களை வழக்கில் புகுத்தினார்.

“என்னுடைய வீடுகளை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்” என்று சித்தப்பாமீது மீசை தாத்தா வழக்குத் தொடர்ந்தார். “மகன் மீது எந்தத் தகப்பனாராவது வழக்குப் போடுவாரா?” என்று கண்ணீர் சிந்திய பாட்டி, கோபித்துக் கொண்டு சித்தப்பாவின் வீட்டிற்குப் போய்விட்டார். ஆந்திராவா, கேரளாவா என்று தெரியவில்லை. “சமாதானம் செய்து வீட்டிற்கு அழைத்து வாருங்கள்” என்று மற்றவர்கள் சொன்னபோது “தானாகப் போனவள் தானாக வரட்டும். நானாக வரச் சொல்லமாட்டேன்” என்று மறுத்து விட்டார். ஆனால் மாதாமாதம் பாட்டி இருந்த வீட்டிற்குச் சென்று நலம் விசாரித்துவிட்டு செலவிற்குப் பணம் தந்துவிட்டு வருவார். தாத்தாவின் நண்பர் வாசுதேவய்யா “இவ்வளவுதானா உன் பிரியம்?” என்று கேட்டபோது “அவள் அண்ணன் சில நாட்கள் என்னைக் காப்பாற்றினான். அதனால் இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன். எனக்குத் தெரிந்து காதல், பிரியம், தாம்பத்தியம், இல்லறம் எல்லாம் கதைகளில்தான் இருக்கிறது” என்றாராம்.

தாத்தா போட்ட வழக்குதான் முதலில் விசாரணைக்கு வந்தது. கண்களைக் கட்டிய நீதிதேவதையின் மனித ரூபம்



என்று வருணிக்கப்பட்ட நீதிபதி ரத்தினத்தின்முன் வழக்கு வந்தது. சில நிமிடங்களில் உண்மையைப் புரிந்து கொண்டு விட்ட நீதிபதி “மகன் போட்ட வழக்கு முடியும் வரை, வீடுகளில் எவரும் குடியிருக்கக் கூடாது. வீடுகளை அரசாங்கம் பராமரிக்கும். அவற்றைப் பூட்டி அரசாங்க முத்திரை போட வேண்டும்” என்று இடைக்காலத் தீர்ப்புத் தந்தார்.

நீதிமன்றம் கலைந்தபின் நீதிபதி மீசைத் தாத்தாவை தனிமையில் அழைத்து “உங்கள் பக்கம்தான் உண்மை உள்ளது. ஆனால் சட்டம், இயற்கையைப் போல, தன் போக்கில் மெல்லத்தான் செயல்படும். இருந்தாலும், ஓரளவிற்கு உங்களுக்கு சாதகமாக தற்காலிகத் தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன்” என்றார். “பராமரிப்பு இல்லாவிட்டால் வீடு பாழாகி விடும். அதற்கான செலவை நான் ஏற்று கொள்கிறேன். அதை அனுமதிக்க வேண்டும். அரசாங்கத்திற்கு என்னால் வீண் செலவு வேண்டாம்” என்று மீசை தாத்தா வேண்டுகோள் வைக்க நீதிபதி அதை ஏற்றுக் கொண்டு பாராட்டினார்.

மீசை தாத்தா நீதிபதியை தனிமையில் சந்தித்து லஞ்சம் தந்து விட்டார் என்று வக்கீல் புரளி கிளப்பி, அதை சித்தப்பாவை நம்ப வைத்தார்.

இடைக்காலத் தீர்ப்பால் சித்தப்பாவின் ஆக்கிரமிப்பு ஒரு மாதத்திற்குள் முடிவிற்கு வந்தது. அவரை ஆட்டுவித்த இரண்டு பெண்களின் நம்பிக்கையும் ஆட்டம் கண்டது. கோயம்புத்தூர் மில் அதிபரின் பண்ணை வீட்டிற்கு ஆந்திர அழகியும், அவரது மகனின் ஊட்டிமலை வீட்டிற்கு மலையாளத்து மங்கையும் இடம் பெயர்ந்தார்கள்.

நீதிபதி ரத்தினத்தின் இடைக்காலத் தீர்ப்பால் பங்களாக்களை விட்டு வெளியேறிய சித்தப்பா பாட்டியோடு ஒரு சிறிய வாடகை வீட்டிற்குக் குடி போனார். அவரது உல்லாச வாழ்க்கை முடிவிற்கு வந்தது. தாத்தாவை எப்படியாவது பழி வாங்க நினைத்தார். பாட்டிக்கு மாதாமாதம் தாத்தா தந்த பணம்தான் ஒரே நிலையான வருமானம். அதில் வீட்டு செலவு போக மீதி இருந்ததை வைத்து சித்தப்பா, மீசை தாத்தாவின் மீதான வழக்கை தொடர்ந்து நடத்தினார். அது மட்டுமே அவரது ஒரே

பொழுது போக்காயிற்று. வழக்கு இருபது வருடங்கள் நடந்தது. பாட்டி சித்தப்பாவோடுதான் இன்னமும் இருக்கிறார். எங்கள் வீட்டிற்கு இன்றுவரை ஒருமுறை கூட வரவே இல்லை. அது என்ன வீம்போ!

இந்தக் காலகட்டத்தில்தான் அம்மா வட இந்தியாவிலிருந்த ஆசிரமம் ஒன்றுக்கு கிளம்பினார். கூடவே அப்பாவும் போய் விட்டார்.

ஆனால், தாத்தா உற்சாகமாகவே இருந்தார்.

“சித்தப்பாவைத் தூண்டிவிட்ட பெண்களின் மீது சட்டப்படியோ, சட்டத்தை மீறியோ நடவடிக்கை எடுத்திருக்கக் கூடாதா?” என்று ஒரு நண்பர் கேட்டபோது மீசை தாத்தா “நான் அதைப் பற்றி நினைத்ததே இல்லை. மனிதன் என்றால் எப்படியாவது பிழைத்திருக்க வழி தேடுவான். அதைத்தானே அந்த அப்பாவிப் பெண்களும் செய்தார்கள்? அவர்கள் நிலையிலிருந்து யோசிக்க வேண்டாமா?” என்று பதில் சொன்னார். சித்தப்பாவின் கூடவே இருந்திருந்தால் அந்தப் பெண்களுக்கும் வாழ்நாள் முழுவதும் மீசை தாத்தா சாப்பாடு போட்டிருப்பார் என்பதில் எங்களுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி கல்யாணத்திற்குமுன் ஜமுனாவிடம் போனில் சொன்னேன். நிச்சயத்திற்கும், கல்யாணத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஜமுனாவோடு அடிக்கடி போன் பேசுவேன். சிரித்துக் கொண்டே ஜமுனா “அதெல்லாம் சரிதான். பாட்டி, சின்ன மாமா நிலையிலிருந்து எப்போதாவது தாத்தா யோசித்திருக்கிறாரா?” என்று கேட்டாள்.

நான் அதை வேடிக்கை என்று நினைத்துக் கொண்டு மீசை தாத்தாவிடம் சொன்னேன். மீசை தாத்தா திகைத்து விட்டார். மீசையை நீவி விட்டுக் கொண்டு மௌனமாக இருந்தார். அதன்பின் அவரது செயல்பாடுகள் வழக்கத்திற்கு மாறாக மேலும் மர்மமாக இருந்தன. எவரிடமும் சொல்லாமல் அடிக்கடி வெளியூர் சென்று வருவது கம்பெனி ஆரம்பித்த நாள் முதல் அவரது வழக்கம். எங்கு போய் வருகிறார் என்பது எவருக்கும்



தெரியாத மர்மமாக இருந்தது என்றாலும் சொத்திருக்கும் தாத்தாவைக் கேள்வி கேட்கும் தைரியம் எவருக்குமில்லை.

## 4. மீசை தாத்தாவின் பேரர்கள்

என் பெரியண்ணார் புருஷோத்தமர் என்னைவிடப் பத்து வயது மூத்தவர். என் சின்னண்ணார் மதுசூதனர் என்னை விட எட்டு வயது மூத்தவர்.

என்னைப் போலல்லாமல் இருவருமே படிப்பில் கெட்டிக்-காரர்கள். எம்.பி.ஏ படித்துவிட்டு சென்னையில் பெரிய சாப்ட்வேர் நிறுவனங்களில் மேலாளர்களாக வேலை பார்க்கின்றனர்.

என்னைவிட ஏழு வயது மூத்தவரான அக்கா யசோதா கம்ப்யூட்டர் துறையில் பொறியாளர். படிப்பு முடிந்ததும் திருமணம் செய்து கொண்டு இப்போது இல்லத்தலைவியாக இருக்கிறார்.

மூவருக்கும் கல்லூரியில் படிக்கும்போதே காதல் வந்துவிட்டது. புருஷண்ணார் சென்னையில் பெரிய பட்டு ஜவுளிக் கடை வைத்திருப்பவரின் பெண்ணையும், மதுவண்ணார் சென்னையில் காபித்தூள் விற்கும் கடைகள் பல வைத்திருப்பவரின் பெண்ணையும் காதலித்தனர். இருவருமே ஒருவகையில் தூரத்துச் சொந்தம். மிகவும் வசதியானவர்கள். தாங்கள் வசதியானவர்கள் என்பதை நிமிடத்திற்கு நிமிடம் பிறருக்கு உணர்த்திக் கொண்டே இருப்பவர்கள்.

பெண் வீட்டுப் பெரியவர்கள் வசதி, படிப்பு, வயது, சாதி எல்லாமே பொருந்தி வரும் பையன்களாகப் பார்த்துக் காதலித்தத் தங்கள் பெண்களின் கெட்டிக்காரத்தனத்தில் மகிழ்ந்து போனார்கள். “சம்பாதிக்கும் தாத்தா, மாமியார் இல்லை, நாளானாலும் ஜெயிக்கப் போகும் வழக்கு என்று பற்பல மேலதிக நன்மைகளும் இருந்தபடியால் இரு அண்ணார்களின் கல்யாணமும் இரு பக்கங்களிலும் சில லட்சங்கள் செலவழிக்கப்-பட்டு வெகு சிறப்பாக நடந்தேறின.

மூத்த அண்ணி ஜவுளி அண்ணி என்றும், இளைய அண்ணி காபி அண்ணி என்றும் என்னால் காரணப் பெயர் தரப் பெற்றனர். இருவரும் பெயர்களை விரும்பி ஏற்றுக் கொண்டதால், அவை தீர்க்காயுள் பெற்றன.

அப்போது நான் பள்ளியில்தான் படித்துக் கொண்டிருந்தேன். இரண்டு அண்ணிகளுமே என்னிடம் பிரியத்துடன் இருந்தனர். ஜவுளி அண்ணி என்னைத் தன் பிள்ளை போலவே நடத்தினார். அதனால் காபி அண்ணியும் என்னிடம் அதே போல நடந்து கொண்டார். இரண்டு அண்ணிகளுக்கும் குழந்தைகள் பிறக்கும்வரை அந்த அன்பு தொடர்ந்தது. அதன்பின் முன்பு போல கவனம் கிடைக்காவிட்டாலும் அவர்கள் என்னிடம் அன்பாகவே இருந்தனர்.

ஜவுளி அண்ணியின் அப்பா ஜவுளி மாமா. அவருக்குத் தெரிந்து பல தலைமுறைகளாக சென்னையில் பட்டு ஜவுளி வியாபாரம் செய்து வருவதாகக் கூறிக் கொள்வார். அவருக்கு முன்னோர்கள் ஐநூறு வருஷங்களுக்கு முன்னால் விஜயநகர பேரரசில் அரசகுடும்பத்தினருக்குப் பட்டு ஜவுளி நெய்து தந்தார்களாம். தேவராயர் காலத்தில் மாமாவின் மூதாதை நாட்டில் மிகப் பெரிய செல்வந்தராக இருந்தாராம். தேவராயரின் அந்தப்புரத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இருந்ததாக வரலாறு கூறுகிறது. ஆளுக்கு ஒரு பட்டு சேலை நெய்து தந்தாலே சந்தேகமில்லாமல் பெரிய செல்வந்தர் ஆகியிருக்க முடியும்தான். தேவராயர் பத்தாயிரம் பெண்களோடு சல்லாபம் செய்தது பற்றி நான் எதுவும் நினைக்கவில்லை. எப்படிப் பத்தாயிரம் பெண்களைச் சண்டை போட்டுக் கொள்ளாமல் ஒரே அரண்மனையில் வைத்துப் பார்த்துக் கொண்டார் என்பதுதான் எனக்குப் புதிராக இருக்கிறது.

பின்னர் வந்த சுல்தான்கள் காலத்தில் சொத்துக்களை விட்டுவிட்டு மாமாவின் மூதாதையர் சென்னப் பட்டணம் ஓடி வந்து சிறிய அளவில் தொழில் ஆரம்பித்து இன்று ஓரளவிற்கு நல்ல நிலையில் வியாபாரம் நடக்கிறதாம். இப்பழங்கதைகள் எந்த அளவிற்கு நம்பத்தக்கவை என்பது ஜவுளி மாமாவிற்கே



தெரியாது. ஆனால், அவர் குடும்பத்தினர் மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி, இவற்றை வரலாற்று உண்மைகள் என்று பல தலைமுறைகளாக நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

மாமா குடும்பத்தினரின் பேச்சையும், நடத்தையையும் பார்த்தால் அரச குடும்பத்தினரோடு பழகியதற்கான பல அடையாளங்களை பண்பறியாதவனும் பார்க்க முடியும்.

காபி அண்ணியின் அப்பா காபி மாமா. அவர் குடும்ப வரலாறு ஜவுளி மாமா குடும்ப வரலாறுக்கு நேர்மாறானது. அவருக்கு மூதாதையர் பற்றிய எந்த வரலாறும் தெரியாது. அதனால் குடும்பப் பெருமை பற்றிய பேச்சும் அவரிடம் இல்லை.

ஆண்டியில் பரம்பரை ஆண்டி, பஞ்சத்து ஆண்டி என்ற இரண்டு வகை உண்டாம். பணக்காரரிலும் பரம்பரை பணக்காரர், பஞ்சத்து பணக்காரர் என்ற இரண்டு வகை உண்டு. ஜவுளி மாமா முதல் வகை. காபி மாமா இரண்டாவது வகை.

சில வருடங்களுக்கு முன்னால் இனி இந்தியாவில் பஞ்சம் வராது என்று உலகம் நம்பியபோது மகாராஷ்டிராவில் பஞ்சம் வந்தது. அப்போது காபிக் கொட்டை தரகராக சிறு வருமானத்தோடு இருந்த மாமா தமிழ்நாட்டிலிருந்து பலவகையான பொருட்களை சட்டத்திற்கு உட்பட்டும், அப்பாற்பட்டும் மகாராஷ்டிரா கொண்டு போய் அதிக லாபத்திற்கு விற்று பணக்காரரானார். “லாபத்தை மட்டும் சொல்லிக் காட்டுகிறீர்களே? பஞ்ச காலத்தில் நாட்டுக்கு நான் செய்ததும் ஒரு சேவைதான்” என்று தன் செயலை நியாயப்படுத்துவார். அதன்பின் சென்னையில் பல இடங்களில் காபிப் பொடி விற்கும் கடைகள் ஆரம்பித்து மிகநல்ல நிலையில் இருக்கிறார். காபி மாமா பொதுவாக நல்லவர். ஆனால் சம்பாதிக்க சிறு வாய்ப்புக் கிடைத்தாலும் தர்ம, நியாயங்களைத் தற்காலிகமாக ஆசைக்காற்றில் பறக்க விட்டுவிடுவார்.

காபி மாமா திடீர், திடீரென எதிர்பாராத வழிகளில் பெரிய தொகை சம்பாதிப்பதைப் பார்த்த ஜவுளி மாமாவும், காபி மாமாவின் ஆலோசனையைப் பின்பற்றி அவ்வப்போது

சம்பாதித்தாலும் மனச்சாட்சியின் உறுத்தலுக்கு ஆளாகி, பின் மீள்வார். பல இடங்களில் காபி மாமாவைவிட, ஜவுளி மாமாவிற்குச் செல்வாக்கு அதிகம் என்பதால், அவர் செல்வாக்கு காபி மாமாவிற்குத் தேவையாக இருந்தது. இருவரும் ஜாடிக்கு ஏற்ற மூடியாக இருந்தனர். சந்தர்ப்பத்தைப் பொறுத்து எவர் ஜாடி, எவர் மூடி என்பது மாறும்.

யசோதா அக்கா தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை மகாதேவன் அன்னியம். சொத்து எதுவுமில்லாத, சாதாரணமான குடும்பம் என்றாலும் அவர் நன்றாக சம்பாதித்ததால் வசதியாக வாழ முடிந்தது. மீசை தாத்தா, பையனோடு சிறிது நேரம் பேசியபின் “இவர் உனக்கு ஒத்து வருவார். நம் குடும்பத்திற்கு ஒத்து வரமாட்டார்” என்றார். “அதனால் பரவாயில்லை” என்று அக்கா கூறிவிட்டார். கல்யாணம் பெண் வீட்டாரின் முழுச் செலவில் சிறப்பாக நடந்தது.

அத்தான் அக்காவிடம் மிகுந்த பிரியத்துடன் இருந்தார். ஆனால், வழக்கத்திற்கு அதிகமான மாப்பிள்ளை மரியாதையை எங்கள் குடும்பத்திடமிருந்து எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்ப்பதற்கு அதிகமாகவே மீசை தாத்தா புன்சிரிப்போடு மரியாதை தந்து விடுவார். ஆனால் அத்தானுக்கும், அண்ணார்களுக்கும் அவ்வப்போது மனக்கசப்பு ஏற்பட்டு, பின் தாத்தா தலையிட்டு சமாதானம் உண்டாகும்.

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

# 60-ஆம் நிமிஷம் 60-ஆம் வினாடி

புத்தக சேவையில் ஓர் அன்பரை உங்களிடம் எத்தனை புத்தகங்கள் உள்ளன, நான் அவையனைத்தையும் வாங்கிக் கொள்கிறேன் என ஒருவர் 17 பிரதிகளை வாங்கினார். இதற்கு என்ன பொருள். நான் எழுதிய பல புத்தகங்களில் மனிதன் கற்பனைக்கெட்டாத பல காரியங்களைச் சாதிக்கலாம் என எழுதினேன். அவை அன்னையின் பவரைக் காட்டும். பணக்காரப் பெண் தன் பணத்தின் பெருமையைக் கருதுவாள். சில சமயம் எடுத்தும் கூறுவாள். அவள் அழகிற்கு அதிக மரியாதையுண்டு என அவள் நினைக்கும் சமயம் மனம் நிறையும். தன் பணத்தையும், அழகையும் கடந்த தன் நல்ல குணத்தை ஒருவர் போற்றுவது அவளுக்கு ஆத்ம திருப்தி தரும். அன்னைக்குச் செய்யும் பிரார்த்தனைகள் பலிக்கும். அன்னைக்குரிய பவர் பெரியது என்பதெல்லாம்விட அன்னையின் ஆன்மிக உண்மையை அறிய முடியும் என்ற நேரம் ஆத்மா விழித்து அகிலமெல்லாம் பரவும். அதைச் செய்வது சமர்ப்பணம், சரணாகதி, **Sincerity**, உண்மை, நன்றியறிதல், திருவுள்ளம் பலிக்கட்டும் என்ற பிரார்த்தனை. பக்தி உண்மையானால் நம்பிக்கை சாதிக்கும். எதுவும் உண்மையானால் எதையும் சாதிக்கும். சாதிப்பது காரியம் கூடிவருவது, பிரார்த்தனை பலிப்பது, வாய்ப்பு பெறுவது மனித இதயம். மனித இதயத்தைக் கடந்தது ஆத்மா. **Self** என்பது பிரம்மமான உலகின் ஆத்மா. **Self** மனிதனில் மேல் மனத்தில் மனித ஆத்மாவாக அகந்தைக்குட்பட்டு காலத்திலும் மனத்தாலும் செயல்படுவது **self** எனப்படும். **Spirit** என்பது தன்னை அறிந்த விழிப்புள்ள **Self. Purusha** என்று நாம் கூறுவது மனிதனில் உள்ள **spirit. Spirit** என்பது பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்தில் உள்ளது.

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

அதுவே மனிதனில் உள்ளதை பகவான் **spirit** என்கிறார். **Ishwara** என்பது பரிணாம வளர்ச்சியுள்ள **spirit.** மனிதனிலும் பிரபஞ்சத்தைக் கடந்தும் இவை இருப்பதால் பரநிலை **supreme**-இல் உள்ளவற்றை **capital** எழுத்தாலும் பிரபஞ்சத்தில் மனிதனில் உள்ளதை சிறிய எழுத்தாலும் குறிப்பிடுகிறார். இவை பரம்பரைக்கு ஒத்து வராது. பரம்பரையில் எல்லாம் ஆத்மா. **Soul, Self, Spirit, Iswara, Divine** எல்லாம் ஆத்மாவெனக் குறிப்பிடுவார்கள். இடம், பொருள், ஏவல் அறிந்து எது எதைக் குறிக்கிறது என அறியும் சூட்சும நுணுக்க அறிவுள்ளவர்க்கு தத்துவம் புரியும். மணிக்கொருமுறை சமர்ப்பணம் செய்வதைப் பொதுவாகச் செய்யலாம். மணியடிக்கும் பொழுது செய்யலாம். 60 நிமிஷம் 60 வினாடிக்குமேல் செய்யலாம். விழிப்புள்ள 18 அல்லது 20 மணி செய்யலாம். தூக்கத்தில் மணியடிக்கும் பொழுது நிமிஷம் தவறாமல், வினாடி தவறாமல் எழுந்து செய்பவருக்கு அவரது ஆழ்மனம் **subconscious** விழிப்பானது என அறியலாம். அது அன்னையின் ஆன்மிக அம்சத்தை அறிய உதவும். அந்நிலை பலித்தால் மனம் நிறைவடையும். ஆத்மா விழித்து நிறைவடையும், பூரிக்கும். அந்த நேரம் செய்யும் புத்தக சேவையில் ஒருவர் 17 பிரதி ஒரே புத்தகத்தில் வாங்குவார். 5 பேர்கள் 150 புத்தகம் எடுத்துப் போய் 2 அல்லது 3 நாளில் விற்க முயன்றால் ரயிலில் 40 விற்கும், மீதி முதல் நாளே விற்றுவிடும். புத்தகம் பொக்கிஷம். பிறருக்கு 1 பிரதி தர முயல்வது ஆன்மிக நல்லெண்ணம். காரியம், பலன், பிரார்த்தனை ஆகியவற்றைக் கடந்த பவித்திரமான மனநிலைக்குரிய பக்குவம் இது. இதன் அடையாளம் குதூகலம் உள்ளிருந்து பொங்கி எழுவது.